பக்கங்கள்: 11

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 சித்திரை 04 வியாழக்கிழமை 17.04.2025 கதிர் 159

# உயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ள சைவ மடங்களை உடன் விடுவிக்குக

## இன்று யாழ்ப்பாணம் வரும் ஜனாதிபதி அநுரகுமாரவிடம் இந்து மா மன்ற உப தலைவர் திருமுருகன் வலியுறுத்து

பலாலி உயர் பாதுகாப்பு வலயத்திற்குள் உள்ளசைவமடங்களைஇன்றுயாழ்ப்பாணம் வரும் ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்க உடனடியாகவிடுவிக்கவேண்டும்.அதேபோன்று அவர்வாக்குறுதியளித்தபடிதமிழ்மக்களின் பிரச்சினைகளுக்கும் நிரந்தரமாகத் தீர்க்க முன்வரவேண்டும் என்று அகில இலங்கை இந்து மா மன்ற உப தலைவர் ஆறு திருமுருகன் கோரியுள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

யாழ்ப்பாணம்வரும்ஜனாதிபதிஅநுரகுமார திசநாயக்க, கீரிமலை சடையம்மா மடம், ஆதிச்சிவன்கோயில்நிலம்,காங்கேசன்துறை தல்செனஹோட்டலின் பாவனையில் உள்ள சுக்கிரவாரசத்திரமடத்துநிலம்என்பவற்றை உடனடியாக விடுவிக்கவேண்டும்.

நீண்ட காலமாக சைவ மக்கள் வழிபாடுசெய்து வந்த புராதன இடங்கள் உயர்பாதுகாப்புவலயம்என்றபெயரில் ☞2

## இது ரகசியம் அல்ல!

கடந்த நாடாளுமன்றத்தில் இருந்தவர்கள் எல்லோரும் செயற்றிறன் அற்றவர்கள், திருடர்கள் என்பது தேசிய மக்கள் சக்தியின் குற்றச்சாட்டாக இருந்தது. தேர்தல் காலம் முழுவதும் அவர்கள் இதனையே பரப்புரை செய்து வந்தார்கள். இதை நம்பி இலங்கை மக்கள் அவர்களுக்கு 159 ஆசனங்களை அள்ளி வழங்கினார்கள். அப்படியானால் இந்த 159 பேரும் மிகச் ☞2

## பங்குச் சந்தை சுட்டெண் நேற்று அதிகரிப்பு

நீண்டவிடுமுறைக்குப்பிறகுகொழும்பு பங்குச் சந்தையில் நேற்று மீண்டும் வர்த்தகம்நடவடிக்கைகள்தொடங்கியபோது விலைக் குறியீடுகளில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு பதிவாகியுள்ளது.

அதனடிப்படையில், அனைத்துப்பங்கு விலைச் சுட்டெண் 99.68 புள்ளிகளால் அதிகரித்துள்ளது.

அந்தவகையில், அனைத்துப் பங்குகளின் மொத்த விலைச் சுட்டெண் இன்று 15,625.88 புள்ளிகளாகப் பதிவாகியுள்ளது.

அதன்படி, கொழும்புபங்குச்சந்தையின் மொத்தப் புரள்வானது இன்றையதினம் 792பில்லியன்ரூபாவாகபதிவாகியுள்ளது.

## தெற்கிலிருந்து வந்து அநுர இங்கு ஆட்சிசெய்ய முடியாது

### அவருடன் இணைந்துள்ள புல்லுருவிகளுக்கும் இடமில்லை மட்டக்களப்பு எம்.பி. சாணக்கியன் நேற்று கொந்தளிப்பு



கடந்த நாடாளுமன்றத்திலே மட்டக்களப்பு மாவட்டம் மாத்திரம் தமிழ் அரசுக் கட்சியை வெற்றிபெறச் செய்தது. இந்தஉள்ளூராட்சியில்வடக்கு கிழக்கு தமிழர் தாயகம் முழுவதும் தமிழ்அரசுக்கட்சியுடன்இருக்கின்றது என்ற செய்தியை நாங்கள் இந்த ஆளும்தரப்புக்குச்சொல்லவேண்டும். எமது பிரதேசங்களைப் பற்றித் தெரிந்தவர்களே இந்தப் பிரதேசத்தை ஆட்சி செய்யவேண்டும். தென்னிலங்கையில் இருந்து வந்து அனுரகுமார இங்கு ஆட்சி செய்ய வேண்டியதில்லை. அவருடன் இணைந்திருக்கும்புல்லுருவிகள்ஆட்சி செய்ய முடியாது என்று மட்டக்களப்பு மாவட்ட தமிழ் அரசுக் கட்சி ☞8

## சபைகளை ஜேவிபி கைப்பற்றினால் மன்னாரைக் காப்பாற்றவே முடியாது

### செல்வம் எம்.பி. தெரிவிப்பு

உள்ளூராட்சிமன்றங்கள் காற்றாலை மின் உற்பத்தி மற்றும் கனிய மணல் அகழ்வுக்கான அனுமதியை வழங்கக்கூடிய அதிகாரம் கொண்டவை. எனவே உள்ளூராட்சிமன்றங்களை ஜே.வி.பி. ஆளும்தரப்பு முழுமையாககைப்பற்றுமாக இருந்தால் மன்னார் மாவட்டத்தை காப்பாற்ற முடியாத ஒரு சூழலை ஏற்படும் என்று தமிழீழ விடுதலை இயக்கம் ரெலோ கட்சியின்தலைவரும்,வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

மன்னாரில் உள்ள அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகச் சந்திப்பின்போதே அவர் இதனைத்தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான காலம் நெருங்கிக் கொண்டு இருக்கின்ற நிலையில் வடக்கு கிழக்கில் உள்ள ☞2

## சீனப் பொருட்களுக்கான அமெ. வரி மேலும் உயர்வு

### 145 இலிருந்து 245 சதவீதமாகியது

சீனப் பொருட்களுக்கு இதுவரை 145 சதவீதமாகஇருந்தஇறக்குமதிவரியை 245 சதவீதமாக உயர்த்துவதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

அமெரிக்கஜனாதிபதிட்ரம்ப், பரஸ்பரவரி என்றபெயரில்அனைத்துநாடுகளுக்கான இறக்குமதி வரியை உயர்த்தினார். இதற்கான அறிவிப்பை ஏப்ரல் 2 வெளியிடப்பட்டது. பின் அமெரிக்காவுடன் பேச்சு நடத்திய 60இற்கும் மேற்பட்ட நாடுகளின் வரியை நிறுத்தி வைத்தார்.

கலந்துரையாடலை நடத்த முன்வராத சீனாவுக்கு மட்டும் வரி உயர்வில் விலக்கு அளிக்கவில்லை. மாறாக சீனாவுக்கான வரியை 145 சதவீதமாக ட்ரம்ப் உயர்த்தினார். பதிலுக்கு சீனா அமெரிக்கா மீது 125 சதவீதமாக ☞8

## அமெரிக்கா விதித்துள்ள புதிய வரியால் ஒரு லட்சம் பேருக்கு வேலை பறிபோகும்

### ரணில் விக்கிரமசிங்க எச்சரிக்கை



அமெரிக்காவின் புதிய வரிக் கொள்கையால் இந்த நாட்டில் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்டோர் தொழில்வாய்ப்புகளை இழக்கும் அபாயம் இருப்பதாக முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

அவர் நேற்று வெளியிட்ட அறிக்கையில், ஆளும்தரப்பினர் இதை அவசர நிலையாகக் கருத வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

வரிகள் அதிகரிக்கும் போது, ☞8

## போலித் தமிழ்த் தேசியவாதிகளின் இருப்பு உள்ளாட்சி தேர்தலுடன் இல்லாமல்போகும்

### இளங்குமரன் எம்.பி. கொக்கரிப்பு

(சுபேசன்)

வடக்கில் உள்ள உள்ளூராட்சிசபைகளை தேசிய மக்கள் சக்தி கைப்பற்றும் பட்சத்தில் போலித் தமிழ்த்தேசியவாதிகளுடைய இருப்பு இல்லாமல் போகும் என நாடாளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன் தெரிவித்துள்ளார்.

சாவகச்சேரியில் அமைந்துள்ள தேசிய மக்கள் சக்தி அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்திருந்தார். இது தொடர்பாக அவர் தெரிவித்ததாவது:

உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பாக இன்று யாழ்ப்பாண மக்களைத் தெளிவு படுத்த வியாழக்கிழமை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க யாழ்ப்பாணம் வருகிறார்.

எமக்குஎதிரானவிமர்சனங்களுக்கும்அவருடைய வருகையின் போது பதில் இருக்கும்.அதனூடாகத் தெளிவு பிறக்கும்.

தேசிய மக்கள் சக்திக்கு பூரண ஆதரவு உள்ளது. நிச்சயமாக யாழ்ப்பாணத்தில் உள்ள 17 உள்ளூராட்சிமன்றங்களையும் கைப்பற்றுவோம்.

சாவகச்சேரி நகரசபை மற்றும் பிரதேசசபை மற்றும் யாழ். மாநகரசபை ஆகிய சபைகளில் எமக்கு அமோக ஆதரவு உள்ளது.

இம்முறை ஒரே திசையில் பயணிக்க ☞8

## ஆளும் தரப்பை தோற்கடிக்கும் சபைகளுக்கு ஜனாதிபதி நிதி தராவிட்டால் அந்தப் பொறுப்பை நானே ஏற்கிறேன்

### அக்கறைப்பற்றில் நேற்று சஜித் அறிவிப்பு

உள்ளூராட்சி மன்றங்களில் அதிகாரத்தை கைப்பற்றும் கட்சிகள் தொடர்பில் ஆராய்ந்து பார்த்தே உள்ளூராட்சி மன்றங்களுக்கு நிதி வழங்குவோம் என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க கருத்து வெளியிட்டிருக்கிறார். ஜனாதிபதி அவ்வாறு கூறினாலும் ஐக்கிய மக்கள் சக்தி வெற்றி பெறும் உள்ளூராட்சி மன்றங்கள் ஊடாக வழங்கப்படும் ☞8

## உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் சூத்திரதாரியாக பிள்ளையானைப் பெயரிட தே.ம.சக்தி முயற்சி

### உதய கம்மன்பில குற்றச்சாட்டு



விடுதலைப் புலிகளை அழிப்பதற்கு இலங்கை இராணுவத்துக்கு ஒத்துழைப்பு வழங்கிய காரணத்திற்காகவா பிள்ளையான் இலக்கு வைக்கப்படுகிறார். பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் பிள்ளையான் கைது செய்யப்பட்டுள்ளமை சட்டவிரோதமானது. உயிர்த்த ஞாயிறு குண்டுத் ☞2

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

சிறப்பாக செயல்திறனுடன் மக்களுக்கான உழைத்துக் கொட்டிவிடுவார்கள் என்று மக்கள் எதிர்பார்த்திருப்பார்கள்போலும். ஆனால், நடந்து முடிந்த வரவு செலவுத் திட்ட விவாதம்குறித்தநாடாளுமன்றபுள்ளிவிரங்கள் மக்களின் கனவு வெறும் கானல் நீர்தான் என்று தெளிவுபடுத்துகின்றது.

மந்திரிடொட்எல்கே(னிழிஜமிஜூஷஷ்.யிவ) தகவல்களின்படி, 2025 பெப்ரவரி 17 முதல் மார்ச் 21வரை நடைபெற்ற வரவு செலவுத்திட்ட அனைத்து அமர்வுகளிலும் கலந்துகொண்ட நாடாளுமன்றஉறுப்பினர்களின்எண்ணிக்கை வெறும் 10 மட்டுமே. வரவு செலவுத் திட்டம் தொடர்பான விவாதங்களுக்காக 27 அமர்வுகள் நடத்தப்பட்டுள்ளன. இதில் இந்த 1-0 நாடாளுமன்ற உறுப்பினர்கள் மட்டுமே 100% வருகையைப் பதிவு செய்துள்ளனர்.

அதிலும் வேடிக்கை என்னவென்றால் பிரதமர் ஹரினி அமரசூரிய, அமைச்சர் பிமல் ரத்நாயக்க, பிரதி சபாநாயகர் ரிஸ்வி சாலிஹ் ஆகிய மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் மட்டுமே ஆளும்தரப்பைச் சேர்ந்தவர்கள். மீதமுள்ள 7 பேரும்கூட எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள்தான். உடனே உங்களுக்கு தமிழ்நாடாளுமன்றஉறுப்பினர்கள்யாராவது இதற்குள் இருக்கிறார்களா என்ற கேள்வி வந்திருக்குமே, மருந்துக்குக்கூட ஒருவரும் இல்லை. அதனால் கவலைப்படாதீர்கள்.

முழு வருகையுடன் கூடிய நாடாளுமன்ற வருகையைப் பதிவு செய்த உறுப்பினர்கள் பிமல் ரத்நாயக்க, ஹரினி அமரசூரிய, ரிஸ்வி சாலி, டி.வி. சானக, தயாசிறி ஜயசேகர, திலித் ஜயவீர, கயந்த கருணாதிலக, ஹேஷா விதானகே, சுஜித் சஞ்சய பெரேரா, மற்றும் ரவி கருணாநாயக்க.

நாடாளுமன்றத்தில்எதிர்க்கட்சியினருக்குப் பேசக் கிடைக்கும் நேரம் மிகக் குறைவானது. மூன்றிலிரண்டுக்கும்மேற்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆளும்தரப்பினர் என்பதால் அவர்களுக்கே அதிக நேரம் ஒதுக்கப்படுகின்றது. இப்படிக்குறைவானஎதிர்க் கட்சிகளின் நேரத்தில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் நேரம் என்பது இன்னும் சொற்பமானது. அதனால் அங்கு போய் என்ன செய்வது என்று நினைத்துவிட்டு, தமக்கு உரையாற்ற நேரம் கிடைக்கும்போதுமட்டும்நாடாளுமன்றத்திற்குச் சென்றிருப்பார்கள் எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள். ஆனால் ஆளும்தரப்பு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு என்ன வந்தது? அவர்களில் பலர் அரசியலுக்கே புதியவர்கள். நாடாளுமன்றத்தில்கிடைக்கும்வாய்ப்பில்தான் உரையாற்றியே பழகியிருக்கவேண்டும். மற்றையஉறுப்பினர்கள்என்னசொல்கிறார்கள், எப்படி உரையாற்றுகிறார்கள், எதைப் பற்றிப் பேசுகிறார்கள் என்பதையெல்லாம் நன்கு அவதானிப்பதற்கு அவர்கள் நாடாளுமன்றத்திற்கு ஒழுங்காகச் சென்றிருக்கவேண்டும். ஆனாலும் அவர்கள் அப்படிப் போகவில்லை.

மாற்றம் மாற்றம் என்றவர்களுக்கு இது நல்ல மாற்றம்தான் போங்கள்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## உயர் பாதுகாப்பு....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்னும் விடுவிக்கப்படாமல் உள்ளன. தாங்கள் இவற்றை விடுவிப்பதில் உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும். மேலும் பொது மக்களின் காணிகளில் வடக்கு, கிழக்கில் படையினர் தொடர்ந்தும் தங்கியுள்ளனர். தாங்கள் அவ்விடயத்தில் அக்கறைகொண்டுபொதுமக்களின்இடங்களை விடுவிக்கவேண்டும்.

பாடல்பெற்ற தலமாகிய திருக்கோணேஸ்வரர் திருத்தலத்திற்கு அ-ருகில் பக்தர்களுக்கு இடையூறாகக் கோயிலுக்குச் செல்லும் பாதையில் பெட்டிக் கடைகள் அமைக்கப்பட்டு கோயில் புனிதத்தைத் தொடர்ந்துகெடுத்துவருகிறார்கள். இவ்விடயம் தொடர்பாக கடந்த வருடம் தாங்கள் நல்லை ஆதீனத்திற்கு வருகை தந்தபோது எடுத்துரைத்தோம். தயவுசெய்து வரலாற்றுப் பெருமைமிக்க திருக்கோணேச்சரர் திருத்தல சுற்றாடலைப் புனிதமாகப் பேணுவதற்கு உரியநடவடிக்கைஎடுக்குமாறுசைவமக்கள் சார்பில் வேண்டுகின்றோம்.

தாங்கள் பதவி ஏற்றதும் நீண்ட காலமாக உள்ள தமிழர் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பேன் எனக் கூறி வந்துள்ளீர்கள். நிரந்தரமான பூரண உரிமைகளை உள்ளடக்கிய தீர்வை வழங்கி எம்மினத்தின் நீண்ட காலப் பிரச்சினையைத் தீர்க்க முன்வாருங்கள் - என்றுள்ளது.

## உயிர்த்த....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாக்குதல்கள் சம்பவத்தின் பிரதான சூத்திரதாரியாக பிள்ளையானை பெயர் குறிப்பிடுவதற்கு ஆளும்தரப்பு முயற்சிக்கிறது. கண்ணீருடன் பல விடயங்களை பிள்ளையான் என்னிடம் குறிப்பிட்டார். ஏப்ரல் 21 ஜனாதிபதி எந்தச் சூத்திரதாரியைக் குறிப்பிடப்போகிறார் என்பதை நாங்களும் பார்த்துக்கொண்டிருக்கிறோம் என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் தலைவருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள பிவிதுரு ஹெல உறுமய கட்சி அலுவலகத்தில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்து இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

சட்டத்தரணி என்ற அடிப்படையில்தான் குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள பிள்ளையான் என்றழைக்கப்படும் பிள்ளையானைச் சந்தித்துப் பேசினேன். சட்டவிரோதமான முறையில்தான்பிள்ளையானைஆளும்தரப்புக் கைதுசெய்துள்ளது.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் பிரகாரம் கைது செய்யப்படுவதாயின் கைது செய்வதற்கான காரணத்தை எழுத்து மூலமாக கைது செய்யப்படுபவரின் குடும்பத்தாருக்கு அறிவிக்கவேண்டும்.

கைது செய்யப்பட்டமைக்கான காரணம் பிள்ளையானின் குடும்பத்தாருக்கு அறிவிக்கப்படவில்லை. பிள்ளையானை சந்திப்பதற்குஅவரதுசட்டத்தரணியின், கனிஸ்ட சட்டத்தரணி ஏப்ரல் 9 குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்கு சென்ற போது அவருக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. இதன் பின்னர் ஏப்ரல் 11 பிள்ளையானின் குடும்பத்தார் என்னை சந்தித்தார்கள். அவர்களிடமிருந்து பல தகவல்களைப் பெற்றுக்கொண்டேன்.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் 10 அ(1) பிரிவின் பிரகாரம் தடுப்புக்காவலில் உள்ள சந்தேகநபரை பார்ப்பதற்கு அவரது குடும்பத்தாருக்கும், சட்டத்தரணிக்கும் அதிகாரம்உண்டுஎன்பதைகுற்றப்புலனாய்வு திணைக்களத்துக்கு எடுத்துரைத்து, சட்டத்தரணி என்ற அடிப்படையில் பிள்ளையானை சந்திப்பதற்கு அனுமதியை பெற்றுக்கொண்டேன்.

பிள்ளையானுடன் 30 நிமிடங்கள் உரையாடினேன். இதன்போது நான்கு பொலிஸ்உத்தியோகஸ்த்தர்கள்அவ்விடத்தில் இருந்தார்கள். முழுமையாக உரையாடலை கேட்டுக்கொண்டிருந்தார்கள். பிள்ளையான் கண்ணீர் மல்க என்னுடன் பேசினார்.

விடுதலை புலிகள் அமைப்பில் இருந்து விலகி, இலங்கை இராணுவத்துடன் இணைந்து, உயிரைப் பணயம் வைத்து விடுதலை புலிகளைத் தோற்கடிக்க போராடினேன். அன்று விடுதலை புலிகள் பக்கம் இருந்தவர்களில் ஒருசிலர் இன்று நாடாளுமன்றஉறுப்பினர்களாக உள்ளார்கள்.

ஒருசிலர்வியாபாரிகளாகவும், புலம்பெயர் அமைப்புக்களின் தலைவர்களாகவும் உள்ளார்கள். இவர்களுக்கு எதிராக ஆளும்தரப்புச்செயற்படுவதில்லை. என்னை மாத்திரம்ஏன்நெருக்கடிக்குள்ளாக்கவேண்டும். விடுதலை புலிகளை அழிக்க ஒத்துழைப்பு வழங்கிய காரணத்தால் நான் இன்று இலக்குவைக்கப்படுகிறேன் என்று உணர்வுபூர்வமாக என்னிடம் தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் சம்பவம் தொடர்பில் பிள்ளையான் பல விடயங்களை வெளிப்படுத்தினார் என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் உரையாற்றினார்.

குண்டுத் தாக்குதல்கள் சம்பவத்தின் பிரதான பொறுப்புதாரியை தாங்கள் கைது செய்துள்ளதாக ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க ஏப்ரல் 12 கிழக்கு மாகாணத்தில் நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் குறிப்பிட்டார். நான் கடந்த ஞாயிற்றுக்கிழமை (13) தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள பிள்ளையானைசந்தித்தபோதுஇவ்விடயங்கள் குறித்து அவரிடம் வினவினேன்.

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் குறித்து ஒரு வார்த்தைகூடத் தான் வாக்குமூலமளிக்கவில்லை என்று பிள்ளையான் குறிப்பிட்டார். குண்டுத் தாக்குதல்கள் குறித்து பிள்ளையான் ஏதும் அறியவில்லை என்பதை பொறுப்புடன் குறிப்பிடுகிறேன். ஏனெனில் 2015 முதல் 2020 வரையான காலப்பகுதியில் பிள்ளையான் சிறைச்சாலையில் இருந்தார். ஆகவே பிள்ளையான் குண்டுத் தாக்குதலின் பிரதான சூத்திரதாரி என்று குறிப்பிடுபவர்களின் மூளையை முதலில் பரிசோதிக்கவேண்டும்.

பயங்கரவாதி சஹ்ரானுடன் ஒன்றாக புகைப்படம் எடுத்துக் கொண்ட அரசியல்வாதிகளைக் கைது செய்தால் அதில் ஏதேனும் நியாயம் இருக்கும். ஆகவே பிள்ளையானை பிரதான சூத்திரதாரி என்று ஆளும்தரப்புகுறிப்பிடுவதுநகைச்சுவையானது. ஏப்ரல் 21க்கு முன்னர் குண்டுத் தாக்குதல் தொடர்பில் பல உண்மைகளையும், பிரதான சூத்திரதாரியையும் வெளிப்படுத்துவார் என்று ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க மார்ச் 30 குறிப்பிட்டிருந்தார். அதற்கு இன்னும் 5 நாட்களே உள்ளன.

பொலிஸாரின் கயிற்றை விழுங்கிவிட்டு ஜனாதிபதிஇன்றுநெருக்கடிக்குள்ளாகியுள்ளார். குண்டுத்தாக்குதலின் பிரதான சூத்திரதாரியை கண்டுப்பிடிப்பதற்குப் பதிலாக சூத்திரதாரியை உருவாக்குவதற்கு ஆளும்தரப்பு முயற்சிக்கிறது. பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ரவி செனவிரத்ன குற்றப்புலனாய்வு திணைக்களத்துக்கு பொறுப்பாக இருந்த காலப்பகுதியில் தான் சேயா செவ்மினி என்ற சிறுமி பாலியல் துஸ்பிரயோகத்துக்குள்ளாக்கப்பட்டு கொலை செய்யப்பட்ட விவகாரத்தின் பொறுப்பை கொண்டயா என்பவர் ஏற்றுக்கொண்டார்.

டி.என்.ஏ. பரிசோதனையில் கொண்டயா குற்றவாளியல்ல என்பது உறுதிப்படுத்தப்பட்டதன் பின்னர் இந்த குற்றத்தை ஏற்றுக்கொள்ளுமாறு பொலிஸார் தன்னை கொடூரமாகத் தாக்கியதால் அவ்வாறு ஏற்றுக்கொண்டார் எனக் கொண்டயா நீதிமன்றத்தில் நீதிபதி முன்னிலையில் சாட்சியமளித்தார்.

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் சம்பவத்தின் பிரதான சூத்திரதாரியாகப் பிள்ளையானை மாற்றியமைக்க இந்த ஆளும்தரப்பு முயற்சிக்கிறது. பிள்ளையான் பிரகாரனுடன் ஒன்றிணைந்து செயற்பட்டார். ஆகவே அவரை கொண்டயாவின் நிலைக்கு மதிப்பிடுவது ஆளும்தரப்பின் தவறாகும். பிள்ளையானை தடுப்புக் காவலில் வைக்கும் ஆவணத்தில் பாதுகாப்பு அமைச்சர் என்ற அடிப்படையில் ஜனாதிபதி கையொப்பமிட்டுள்ளார்.

இந்த ஆவணத்தில் உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல்கள்பற்றிஒருவார்த்தைகூடக் குறிப்பிடப்படவில்லை. இந்த தடுப்பு காவல் உத்தரவு பத்திரத்தில் ஜனாதிபதி ஏப்ரல் 11 கைச்சாத்திட்டுவிட்டு, ஏப்ரல் 12 கிழக்குக்கு சென்று குண்டுத்தாக்குதல் சம்பவத்தின் பிரதான நபரை கைது செய்துள்ளதாக ஜனாதிபதி குறிப்பிட்டார். பொய்யை உண்மையை போன்று குறிப்பிடலாம். ஆனால் உண்மையாக்க முடியாது - என்றார்.

# திட்டமிட்ட நாளிலேயே தபால் மூல வாக்களிப்பு

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான தபால்மூல வாக்கெடுப்பு எதிர்வரும் வாரம் திட்டமிட்ட வகையில் நடத்தப்படும். தேர்தல் திகதியில் எவ்வித மாற்றமும் கிடையாது என தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பணிகள் குறித்து வினவிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்கான சகல பணிகளும் நிறைவடைந்துள்ளன. உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை நேற்றைய தினம் தபால் திணைக்களத்திடம் ஒப்படைந்துள்ளோம். எதிர்வரும் 27 ஆம் திகதிக்குள் வாக்காளர் அட்டை விநியோக பணிகள் நிறைவடையும்.

தபால்மூல வாக்களிப்பு பிற்போடப்படும் சாத்தியம்காணப்படுவதாகஒருசிலஊடகங்கள் செய்திவெளியிட்டுள்ளமை அடிப்படையற்றது. ஏற்கெனவேதீர்மானித்ததற்கமையஎதிர்வரும் செவ்வாய்க்கிழமை (22), புதன்கிழமை (23) மற்றும் வியாழக்கிழமை (24) ஆகிய தினங்களில் தபால்மூல வாக்கெடுப்பு நடத்தப்படும்.

இந்த மூன்று தினங்களில் வாக்களிக்க தவறும் அரச உத்தியோகஸ்த்தர்கள் எதிர்வரும் 28 மற்றும் 29 ஆகிய இரண்டு தினங்களில் மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுலகத்தில் வாக்களிக்க வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன.

தேர்தல் வன்முறை மற்றும் தேர்தல் சட்டங்களை மீறும் செயற்பாடுகள் அதிகரித்துள்ளமை அவதானிக்க முடிகிறது. தேர்தல் செலவினங்களை ஒழுங்குப்படுத்தும் சட்டத்தின் பிரகாரம் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபடுமாறு அரசியல் கட்சிகளிடம் வலியுறுத்தியுள்ளோம் என்றார்.

## சபைகளை....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனைத்து உள்ளூராட்சி சபைகளிலும் ஜனநாயகத் தமிழ் தேசிய கூட்டமைப்பு போட்டியிடுகின்றது.

சில சபைகளின் வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்ட நிலையில் நீதிமன்றத்தை நாடி தற்போது வெற்றி பெற்றுள்ளோம். இந்த நிலையில் ஜனநாயக தமிழ் தேசியக்கூட்டமைப்பு பல சபைகளை கைப்பற்றும் நிலை ஏற்படும். எனினும் நாங்கள் நிர்ணயம் செய்யும் சக்தியாக இத்தேர்தலில் காணப்படுவோம். யாருடன் இணைந்து செயலாற்றவேண்டும் என்ற நிலை உள்ளது. குறிப்பாக தேசியத்தை நேசிக்கும் தமிழ் கட்சிகளுடன் நாங்கள் கூட்டுச் சேர்ந்து ஆட்சி அமைக்கும் சூழலை உருவாக்குவோம்.

இனி வருகின்ற காலங்களில் நாங்கள் ஒற்றுமையாக இல்லாதுவிட்டால் எமது பிரதேசங்களில் பிளவுகளையும் அழிவுகளையும்அதுஏற்படுத்தும். தேசியத்தை இல்லாது செய்யும் நடவடிக்கையையும் ஏற்படுத்தும். எனவே உள்ளூராட்சி மன்ற தேர்தலின்போது நாங்கள் நிர்ணயம் செய்கின்ற சக்தியாக தேசியத்தை நேசிக்கின்ற கட்சிகளுடன் இணைந்து ஆட்சி அமைக்கின்ற வாய்ப்புகளை உருவாக்குவோம்.

ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர் அடிக்கடி யாழ்ப்பாணத்திற்கு வருன்றனர். ஆனால் பாதிக்கப்பட்ட வன்னி பிரதேசங்களுக்கும் அவர்கள் வரவேண்டும் என அண்மையில் நாடாளுமன்றத்தில் கோரிக்கையை முன் வைத்து உரை நிகழ்த்தினேன். ஆனால் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அமைச்சர்கள் தேர்தல் காலங்களில் மாத்திரமே வன்னி பிரதேசங்களுக்கு வருகின்றனர். குறிப்பாக மன்னார் மாவட்டத்திற்கு வருகின்றனர். தேர்தலில் தமது கட்சி வெற்றியை பெற்றுக்கொள்ளவேண்டும் என்ற அர்த்தத்துடன் மட்டுமே வருகிறார்கள்.

மன்னாரில் கனிய மணல் அகழ்வு மற்றும் காற்றாலை மின் உற்பத்தி பிரதான விடையமாக பார்க்கப்படுகின்றது. மன்னார் மக்களின் எதிர்ப்புக்கு மத்தியில் குறித்த நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டுள்ளது. கடந்த மாவட்ட அபிவிருத்திக் குழு கூட்டத்தில் குறித்த செயல்பாடுகளை நிறுத்தக் கோரிக்கை விடப்பட்டது. ஆனால் தற்போது மன்னாரிற்கு பிரதமர் மற்றும் ஜனாதிபதியின் வருகை என்பது இந்த நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கும், குறித்த இரு திட்டங்களையும் மேம்படுத்துவதற்கான வாய்ப்புகளை உருவாக்குவதற்குமான சந்தர்ப்பமாக அமையும்.

உள்ளூராட்சி மன்றங்கள் காற்றாலை மின் உற்பத்தி மற்றும் கனிய மணல் அகழ்வுக்கான அனுமதியை வழங்கக் கூடிய அதிகாரம்கொண்டவை. எனவே உள்ளூராட்சி மன்றங்களை ஜே.வி.பி. ஆளும்தரப்பு முழுமையாகக் கைப்பற்றுமாக இருந்தால் மன்னார் மாவட்டத்தைக் காப்பாற்ற முடியாத ஒரு சூழல் ஏற்படும்.

மன்னாரில் நகர சபை மற்றும் பிரதேச சபைகளை அவர்கள் கைப்பற்றுவதன்

தொடர்ச்சி 8ம் பக்கம்....

# மாகாண சபைத் தேர்தலை நடாத்தாமல் தேசிய மக்கள் சக்தி இழுத்தடிக்கின்றது

## அம்பாறை எம்.பி. உதுமாலெப்பை நாடாளுமன்றில் தெரிவிப்பு

(ஹமீட்)

87களில் மாகாண சபை முறைமைக்கு ஜே.வி.வி. எதிர்ப்பு தெரிவித்தது. ஆட்சிக்கு வந்தால் மாகாண சபை தேர்தலை நடத்துவோம் என வாக்குறுதி வழங்கிவிட்டு மாகாண சபைத் தேர்தலை நடத்தாமல் ஜே.வி.பி. இழுத்தடிப்பு செய்கிறது என பட்டலந்த வீடமைப்பு திட்டத்தில் உள்ள சித்திரவதைக் கூடங்கள், சட்ட ரீதியற்ற தடுப்பு நிலையங்களை நிறுவுதல், பராமரித்தல் ஆகியவற்றை விசாரணை செய்த ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பான விவாதம் நாடாளுமன்றத்தில் நடைபெற்ற போது அதில் கலந்து கொண்டு உரையாற்றிய அம்பாரை மாவட்ட முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். உதுமாலெப்பை தெரிவித்தார்.

நமது நாடு சுதந்திரம் அடைந்த பின் ஒரு சமூகத்தை அடக்கி ஆள்வதற்கான செயற்பாடுகளும் ஜனநாயக ரீதியிலான செயற்பாடுகளை அழிப்பதற்கான செயல்பாடுகளும் ஆட்சிக்கு வந்த அரசாங்கங்களால் முன்னெடுக்கப்பட்டு வந்தன.

எமது நாட்டில் மூன்று தசாப்த காலமாக நடைபெற்ற கொடூர யுத்தத்தால் சகல இன மக்களும் பெரும் பாதிப்புக்கு உள்ளாகினர். ஆயிரக்கணக்கான சகல இனத்தையும் சேர்ந்த மக்களும் கொல்லப்பட்டனர். நமது நாட்டில் சிறந்த தேசிய தலைவர்களாக செயற்படுவதற்கு பொருத்தமான தலைமைகள் கொன்று குவிக்கப்பட்டனர். இதனால் நீண்ட கால அனுபவங்களை பெற்று சகல சமூகங்களிலும் இருந்து வந்த ஜனநாயக தலைவர்கள் கொல்லப்பட்டனர். இதனால் பல தசாப்த காலங்களுக்குப் பின் தலைவர்களாக வர வேண்டிய இளைய தலைவர்கள் அரசியல் கட்சிகளின் தலைவர்களாகவும் நாட்டின் தலைவர்களாகவும் வரவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது என்பது யதார்த்தமாகும்.

1987 ஆம் ஆண்டு இலங்கை - இந்திய ஒப்பந்தம் செய்யப்பட்டு நமது நாட்டில் மாகாண சபை முறைமை ஏற்படுத்தப்பட்டது. அன்று மாகாண சபை முறைமைக்கு எதிராக ஜே.வி.பி. கட்சியினர் நாடு முழுவதிலும் ஆர்ப்பாட்டம் செய்தனர். அது ஒரு வன்முறையாக மாறியது.

நமது நாட்டைப் பொறுத்த வரையில் மாகாண சபை முறைமை ஏற்படுத்தப்பட்டதால் 09 மாகாணங்களிலும் நமது மக்களுக்கு பாரிய அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இனப்பிரச்சினை தீர்வின் அடையாளமாகவே மாகாண சபை முறைமை உருவாக்கப்பட்டது. குறிப்பாக வடக்கு கிழக்கு மாகாண சபைகளில் மாகாண முதலமைச்சர்களாக சிறுபான்மை இனங்களைச் சேர்ந்த தமிழ், முஸ்லிம் முதலமைச்சர்கள் நியமிக்கப்பட்டார்கள்.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் அமைச்சரவையில் முஸ்லிம், தமிழ், சிங்கள அமைச்சர்களும் நியமிக்கப்பட்டார்கள்.

கிழக்கு மாகாண சபையின் வீதி அபிவிருத்தி, நீர்ப்பாசனம், வீடமைப்பு, நீர்வழங்கல், கிராமிய மின்சாரம் மற்றும் உட்கட்டமைப்பு அமைச்சராக 2 தடவைகள் பதவி வகித்ததுடன் 06 தடவைகள் கிழக்கு மாகாண சபையின் பதில் முதலமைச்சராகவும் கடமை புரிந்து கிழக்கு மாகாணத்தின் மூவின மக்களுக்கும் பாரிய அபிவிருத்தி பணிகளை மேற்கொள்வதற்கு எனக்கு சந்தர்ப்பம் கிடைத்தது.

30 வருட காலங்களாக நமது நாட்டில் ஏற்பட்ட யுத்த சூழ்நிலைகளால் கிழக்கு மாகாணத்தில் சமூகங்களுக்கிடையில் பாரிய இன முறுகல்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. கிழக்கு மாகாணத்தில் அரசாங்க கட்டுப்பாட்டு பிரதேசம் எனவும், புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசம் எனவும் 2 நிருவாகங்கள் இடம்பெற்றுக்கொண்டிருந்தன. கிழக்கு மாகாண சபையின் அபிவிருத்திப் பணிகள் ஊடாக கிழக்கு மாகாணத்தில் மூவின சமூகங்களுக்குமிடையில் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு இன ஒற்றுமையை கட்டியெழுப்பினோம்.

கிழக்கு மாகாணத்தில் கந்தளாய் தொடக்கம் பாணமவரையில் சிங்கள மக்கள் வாழும் பிரதேசங்களில் கிழக்கு மாகாண சபையின் அபிவிருத்தித் திட்டங்கள் பாரியளவில் முன்னெடுக்கப்பட்டன.

ஜே.வி.பி. அரசாங்கம் வெற்றி பெற்றால் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படும் என மக்களுக்கு வாக்குறுதி அளித்தீர்கள். ஆட்சிக்கு வந்த பின் இந்த வருட இறுதியில் மாகாண சபை தேர்தல் நடத்தப்படும் என வாக்குறுதி வழங்கினீர்கள். மக்களும் மாகாண சபை தேர்தல் இந்த வருட இறுதியில் நடைபெறும் என பெரும் ஆவலுடன் எதிர்பார்த்திருந்தனர். திடீரென ஆளுங்கட்சியினர் இந்த வருடம் மாகாண சபை தேர்தல் நடைபெறாது எனவும் அடுத்த வருடமே நடைபெறும் எனவும் அறிவித்துள்ளீர்கள்.

அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்த இந்திய பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் வடக்கு கிழக்கு மாகாணங்களின் தமிழ் தலைவர்களை சந்தித்த வேளையில் இலங்கையில் மாகாண சபை தேர்தலை நடத்துவதற்குரிய திருத்த சட்டதிட்டத்தினை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து மாகாண சபை தேர்தலை நடத்துவதாக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தன்னிடம் தெரிவித்தார் எனத் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் மாகாண சபை தேர்தல் தொடர்பான திருத்தசட்டதை சமர்ப்பிப்பது தொடர்பான எந்தவித நடவடிக்கைகளையும் இதுவரை ஆளுங்கட்சியினர் மேற்கொள்ளாமலிருக்கின்றனர். அன்று 1987 ஆம் ஆண்டு மாகாண சபை முறைமைக்கு எதிராக செயற்பட்ட நீங்கள், இன்று அரசாங்கத்தின் அதிகாரத்தை வைத்துக்கொண்டு மாகாண சபை தேர்தலை நடத்தாமல் இழுத்தடிப்பு செய்கின்றீர்கள். இதே வேளை ஜே.வி.பி. கட்சியினுடைய செயலாளர் ரில்வின் சில்வா அவர்கள் இலங்கையில் மாகாண சபைகள் முறைமையை முற்றாக ஒழிக்கப்போவதாக தெரிவித்துள்ளார்.

மாகாண சபை தேர்தலை நடத்தும் விடயத்தில் ஜே.வி.பி. கட்சிக்கும் தேசிய மக்கள் சக்தி கட்சிக்குமிடையில் முரண்பாடுகள் தோன்றியுள்ளன எனத் தெரிகிறது. எனவே மாகாண சபை தேர்தலை உடனடியாக நடாத்துவதற்குரிய ஏற்பாடுகளை ஆளும் கட்சியினர் மேற்கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தார்.

# தென்மராட்சியில் சர்வதேசத் தரம் வாய்ந்த விளையாட்டு மைதானம் உருவாக்கப்படும்

## தென்மராட்சி அபிவிருத்திக் கழகம் நம்பிக்கை

(சுபேசன்)



தென்மராட்சியில் சர்வதேசத்தரம் வாய்ந்த விளையாட்டு மைதானம் ஒன்று அரசாங்கம் - புலம்பெயர் உறவுகள் மற்றும் தென்மராட்சி மக்களுடைய உதவியுடன் உருவாக்கப்படும் என தென்மராட்சி அபிவிருத்திக் கழகத்தின் பிரித்தானியா நாட்டுப் பிரதிநிதி வைத்தியர் ஆ.புவிநாதன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்; -

தென்மராட்சியில் விளையாட்டு மைதானம் ஒன்று இல்லாத குறைபாடு காணப்படுகின்றது.

சாவகச்சேரி நகரசபையின் கண்காணிப்பில் சாவகச்சேரி நகரில் 10ஏக்கர் நிலப்பரப்பில் பொது விளையாட்டு மைதான காணி உள்ள போதிலும் அதனை அபிவிருத்தி செய்யப்படவேண்டிய தேவை உள்ளது.

மேலும் அருகில் உள்ள சில காணிகளைக் கொள்வனவு செய்து மைதானத்தை விருத்தி செய்ய முடியும்.

அண்மையில் விளையாட்டுத்துறை அமைச்சர் சாவகச்சேரிக்கு வருகை தந்திருந்த நிலையில் மேற்படி விளையாட்டு மைதானத்தை அபிவிருத்தி செய்ய வேண்டியதன் தேவைப்பாட்டைக் கூறியிருந்தோம்.

அந்நிலையில் அமைச்சர் நேரடியாக மைதானத்தை பார்வையிட்டதுடன் அதனை அபிவிருத்தி செய்வதற்கான திட்ட வரைவையும் கோரியிருந்தார்.

நாம் சாவகச்சேரி பொது விளையாட்டு மைதானத்தில் அரங்கம் அமைத்து ஒரு சர்வதேச தரம்வாய்ந்த மைதானமாக மாற்ற முயற்சி எடுக்கிறோம். அதற்கு அரசாங்கம், புலம்பெயர் உறவுகள் மற்றும் தென்மராட்சி மக்களுடைய பங்களிப்பு அவசியமாக உள்ளது.

சாவகச்சேரி பொது விளையாட்டு மைதானம் சிறந்த ஓர் இடத்தில் அமைந்துள்ளது.

அதனை அபிவிருத்தி செய்து சர்வதேச விளையாட்டு மைதானமாக உருவாக்கும் பட்சத்தில் எதிர்காலத்தில் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளை நடத்தக்கூடிய வாய்ப்பு ஏற்படும். -என்றார்.





# அரச உத்தியோகத்தரைத் தாக்கிய பொலிஸார் மனித உரிமைகள் ஆணைக்குழு விசாரணையில்

கிளிநொச்சி கடந்த வாரம் நீர்ப்பாசனத் திணைக்களத்தில் பணியாற்றிய சாந்தபுரம் கிராமத்தைச் சேர்ந்த அரச உத்தியோகத்தர் ஒருவரை தாக்கிய பொலீஸாரை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்பிராந்திய அலுவலகம் விசாரணைக்கு அழைத்துள்ளது.

கிளிநொச்சி சாந்தபுரத்தைச் சேர்ந்த அரச உத்தியோகத்தரான இளைஞனை கிளிநொச்சி பொலீஸ் நிலையத்தைச் சேர்ந்த இரண்டு பொலீஸ் உத்தியோகத்தர்கள் காரணமின்றி தன்னை தாக்கி கைவிலங்கிட்டனர் எனக் குறித்த இளைஞன் முறைப்பாடு செய்திருந்தார்.

குறித்த முறைப்பாட்டின் அடிப்படையில் வருகின்ற 21 ஆம் திகதி மனித உரிமைகளை ஆணைக்குழுவின் யாழ் பிராந்திய அலுவலகத்திற்கு சம்பந்தப்பட்ட பொலீஸ் உத்தியோகத்தர்கள், கிளிநொச்சி பொலீஸ் நிலைய பொறுப்பதிகாரி மற்றும் கிளிநொச்சி மாவட்ட சிரேஸ்ட பொலீஸ் அதிகாரி ஆகியோரை விசாரணைக்கு வருமாறு மனித உரிமைகள் ஆணைக்குழு அழைப்பானை விடுத்துள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ் பிராந்திய இணைப்பாளர் ரி. கனகராஜ் தெரிவித்துள்ளார். 316

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

**உண்மை - நேர்மை - பக்கம் சாராமை**

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## கேள்விகளுக்கு என்ன பதில்?

அரசுத் தலைவர் அநுரகுமார இன்று யாழ்ப்பாணம் வருகிறார். மக்கள் சந்திப்பு என்ற பெயரில் தேர்தல் திணைக்களத்தின் கண்களில் மண்ணைத் தூவிவிட்டு தேசிய மக்கள் சக்தியினர் நடத்தும் உள்ளாட்சித் தேர்தல் பரப்புரைக் கூட்டங்களின் தொடரில் அரசுத் தலைவரின் கூட்டம் இன்று நடக்கவுள்ளது. அதன் முதன்மைக் கூட்டம் நல்லூரில் முத்திரைச் சந்தியில் அமைந்துள்ள கிட்டுப் பூங்காவில் இடம்பெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

2024 அரசுத் தலைவர் தேர்தலுக்கு முன்பாகத்தான் அநுரகுமார யாழ்ப்பாணம் வருவதில் ஆர்வம் காட்டத் தொடங்கினார். அப்போது அவர் தமிழ்க் கட்சிகளின் அந்தத் தேர்தலில் தமிழ்க் கட்சிகளின் ஆதரவைப் பெறுவதில் –குறியாக இருந்தார். அதனால் தமிழ்க் கட்சிகளின் தலைவர்களைத் தேடித் தேடிச் சென்று சந்தித்தார். இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் அவர்களுடன் பேசினார். மாகாண சபைகளின் அதிகாரங்கள் தொடர்பில் பேசினார். மாகாண சபைகள் தொடர்பில் அரசமைப்பில் கூறப்பட்டுள்ளவற்றை அப்படியே நடைமுறைப்படுத்துவோம், அதாவது மாகாண சபைகள் தொடர்பான சட்டங்களை முழுமையாக நடைமுறைப்படுத்துவோம் என்று ஊடகங்களில் பகிரங்கமாகக் கருத்துத் தெரிவித்தார். புதிய அரசமைப்பு ஒன்றின் ஊடாக தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு நிரந்தரமான தீர்வு ஒன்று பெற்றுத் தரப்படும் என்றும் வாக்குறுதியளித்திருந்தார். அதனடிப்படையில் அவரது தேர்தல் அறிக்கையிலும் இந்த விடயங்கள் இடம்பெற்றிருந்தன.

அரசுத்தலைவர்தேர்தலில்வெற்றிபெற்றதைத்தொடர்ந்துவடக்குக்குவரும் சமங்களில் தமிழ்க் கட்சிகளைச் சந்தித்துப் பேசுவதை அவர் முற்றிலுமாகத் தவிர்த்துவிட்டார். அது மட்டுமன்றி, மாகாண சபைகள் தொடர்பிலும் புதிய அரசமைப்புத் தொடர்பிலும் அதிகாரப் பகிர்வு தொடர்பிலும் அவர் இங்கு வாயே திறப்பதில்லை. நாடாளுமன்றத் தேர்தல் காலத்தில் வடக்கிற்குப் பல தடவைகள் வந்த அரசுத் தலைவர், தீர்வு தொடர்பிலோ மாகாண சபைகள் தொடர்பிலோ பேசத் தவறிவிட்டிருந்தார். வழக்கமான அரசியல்வாதிகளைப் போன்றே, அரசுத் தலைவர் தேர்தலுக்கு முன்பாக அடிக்கடி அவருக்குத் தேவைப்பட்ட பத்திரிகையாளர்கள், ஊடகவியலாளர்களும் இப்போது அவருக்கு அவசியமாகப்படுவதில்லை. அவர்களைச் சந்திப்பதுமில்லை. தனது வாக்குறுதிகள் தொடர்பில் அவர்கள் கேள்விகளை எழுப்புவார்கள் என்கிற அச்சம் அதற்குக் காரணமாக இருக்கலாம்.

எப்படியிருப்பினும் இப்போது உள்ளாட்சித் தேர்தலுக்கா அவரும் அவரது அமைச்சர்களும் மீண்டும் யாழ்ப்பாணத்திற்குப் படையெடுக்கத் தொடங்கியிருக்கிறார்கள். வடக்கில் தமது ஆளும்தரப்புக்கான ஆதரவுத் தளத்தைப் பெருக்குவதில் கவனம் செலுத்தி வருகின்றார்கள். அரசுத் தலைவர் தேர்தலுக்கு முன்பாக அவர் தேடிச் சென்று சந்தித்து ஆதரவு திரட்ட முற்பட்ட தமிழ்க் கட்சிகள் இன்று அவரது ஆளும் தரப்புக்கு எதிரிகளாக நிற்கும் அரசியல் களநிலவரத்திலேயே அவர்கள் வடக்குக்கு வந்து செல்கிறார்கள். அதேநேரம் அரசுத் தலைவரினதும் ஆளும் தரப்பினரதும் அரசியல் தீர்வு தொடர்பான வாக்குறுதிகளும், காணி விடுவிப்பு, அரசியல் கைதிகள் விடுவிப்பு, மாகாண சபைத் தேர்தல் என்பன தொடர்பான வாக்குறுதிகள் குறித்தும் அவர்கள் கள்ள மௌனம் சாதிக்கிறார்கள். அது பற்றி அவர்கள் வாயே திறக்கிறார்கள் இல்லை.

இந்து மா மன்றத்தின் துணைத் தலைவர் ஆறு திருமுருகன் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் அரசுத் தலைவரின் வாக்குறுதி தொடர்பில் ஞாபகப்படுத்தியுள்ளார். "தாங்கள் பதவி ஏற்றதும் நீண்ட காலமாக உள்ள தமிழர் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பேன் எனக் கூறி வந்துள்ளீர்கள். நிரந்தரமான முழு உரிமைகளை உள்ளடக்கிய தீர்வை வழங்கி எம்மினத்தின் நீண்ட காலப் பிரச்சினையைத் தீர்க்க முன்வாருங்கள்" என்று அவர் வலியுறுத்தியுள்ளார். கிழக்கில் திருக்கோணேச்சர் ஆலயச் சூழலில் இடம்பெறும் ஆக்கிரமிப்புக்களால் புனிதத் தன்மை கெடுவது குறித்தும் அரசுத் தலைவர் தேர்தலுக்கு முன்பாக நல்லூரில் சைவத் தமிழ் தலைவர்களை வந்து சந்தித்தபோது அநுரவுக்கு எடுத்துரைத்தது குறித்தும் ஞாபகப்படுத்தியுள்ள அவர், அது தொடர்பாக நடவடிக்கை எடுக்க அவர் கடந்த 6 மாதங்களில் தவறியிருப்பதையும் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

ஆறு திருமுருகனின் அறிக்கை அநுரகுமார செய்ததற்கான ஒரு சிறு உதாரணம்மட்டும்தான். காணாமற்போனவர்களின் உறவினர்களுக்குமேடை மேடையாக வழங்கி வாக்குறுதிகள் உட்பட, அரசுத் தலைவர் தேர்தலுக்கு முன்பாக அநுரகுமார தமிழர்கள் தொடர்பில் வழங்கிய வாக்குறுதிகளுக்கு என்னவாயிற்று? அவை எப்போது நிறைவேற்றப்படும்? தமிழர்களின் பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வை, புதிய அரசமைப்பு உருவாக்கத்தை அவர் எப்போது தொடங்குவார்? இந்த ஆண்டுக்குள் நிச்சயம் நடத்தப்படும் என்று அவர் தெரிவித்த மாகாண சபைகளுக்கான தேர்தலுக்கு என்ன நடந்தது? அது எப்போது நடத்தப்படும்? காணாமற்போனோர் பிரச்சினைக்குத் தீர்வு என்ன? படையினர் வசம் உள்ள காணிகள் எப்போது விடுவிக்கப்படும்? உயர் பாதுகாப்பு வலயம் என்று அவர் அண்மையில் அறிவித்திருக்கும் பகுதிகள் எப்போது அகற்றப்படும்? அரசியல் கைதிகள் எப்போது விடுவிக்கப்படுவார்கள்? என்கிற கேள்விகளுக்கு அவர் இன்று பதிலளிப்பாரா?

வடக்கில் அவரது கட்சியை வளர்ப்பதில் காட்டும் ஆர்வத்தை அவர் தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதிலும் கொஞ்சமாவது காட்டவேண்டும் என்பதே தமிழ் மக்களின் எதிர்பார்ப்பு. இல்லையேல் அவரையும் அவரது கட்சியையும்கூட ஏனைய சிங்கள பௌத்த மையவாத தேசியக் கட்சிகளை நிராகரித்ததைப்போல நிராகரிப்பதற்குத் தமிழ் மக்கள் தயக்கம் காட்டவேமாட்டார்கள்.


# யாழ்ப்பாணம் திருவள்ளுவர் கலாசார மண்டபத்தை யாழ். மாநகர சபை விரைந்து பொறுப்பேற்கவேண்டும்

## வடக்கு ஆளுநர் கோரிக்கை









யாழ்ப்பாணம்திருவள்ளுவர்கலாசாரமண்டபத்தின் பராமரிப்புக்குரிய பொறுப்பை இந்திய அரசாங்கம் 5 ஆண்டுகளுக்கு ஏற்றிருந்த நிலையில் அதில் 4 ஆண்டுகள் வரையில் நிறைவுபெற்றுள்ளதாகவும் எதிர்காலத்தில் யாழ். மாநகர சபை அதனைக் கொண்டு நடத்துவதற்குரிய ஒழுங்குகளை முன்னெடுப்பதற்காகவும் கலந்துரையாடல் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் குறிப்பிட்டார்.

இந்திய அரசாங்கத்தின் நிதியுதவியில் கட்டப்பட்டு இந்திய அரசாங்கத்தால் பராமரிப்புச் செய்யப்பட்டு வருகின்ற யாழ்ப்பாணம் திருவள்ளுவர் கலாசார மண்டபத்தை, யாழ்ப்பாணம் மாநகர சபை, எதிர்காலத்தில் இயக்குவது தொடர்பில் ஆராயும் கலந்துரையாடல் வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

கலந்துரையாடலில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எவ்வளவு விரைவாக இதனை மாநகர சபையே பொறுப்பேற்று இயக்க முடியுமோ அதற்குரிய ஒழுங்குகள் செய்யப்படவேண்டும் என்றும் வடக்கு மாகாண ஆளுநர் இதன்போது வலியுறுத்தினார்.

அது தொடர்பில் இந்தியத் துணைத்தூதுவர் கருத்து வெளியிடுகையில் –

இந்தக் கலாசார மண்டபத்தை இயக்குவதற்கான இணை முகாமைத்துவக் குழுவின் கூட்டம் 2023ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதத்தின் பின்னர் நடத்தப்படவில்லைஎன்றும்அதுஎவ்வளவுவிரைவாக இடம்பெறுகின்றதோ, அதற்குஅமைவாகவேஏனைய நடவடிக்கைகளை விரைந்து முன்னெடுக்க முடியும் எனவும் குறிப்பிட்டார்.

எதிர்காலத்தில் இணை முகாமைத்துவக் குழுவை உள்ளூரை மையப்படுத்தியதாக உருவாக்குவது சிறப்பாக இருக்கும் என்றும், அத்துடன் இந்தியத் தூதரகம் ஆலோசனை வழங்கும் ஒரு தரப்பாகவே எதிர்காலத்தில் இருக்கும் எனவும் அவர் தெளிவுபடுத்தினார்.

அத்துடன் கலாசார மண்டபத்தின் ஒவ்வொரு மாடிக் கட்டடத் தொகுதிக்குமான பல்வேறு விதமான முன்மொழிவுகள் கிடைக்கப்பெற்றுள்ளன எனவும் இது சாதகமானதொரு நிலைமை என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

தற்போது இந்தியத் தூதரக அதிகாரிகளே பராமரித்துவரும்நிலையில்நிர்வாகநடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துவதற்காக யாழ். மாநகர சபையால் அதிகாரிகளை நியமிக்குமாறு ஆளுநர் பணிப்புரை விடுத்தார்.

மேலும், இணை முகாமைத்துவக் குழுவின் கூட்டத்தை விரைவாக கூட்டுவதற்கு ஏதுவாக மத்திய அரசாங்கத்தின் கலாசார அமைச்சுக்கு உடனடியாகக் கடிதம் அனுப்புமாறும் ஆளுநர் பணித்தார்.

கலாசார மண்டபம் யாழ். மாநகர சபையால் முழுமையாக இயக்கப்பட்டபின்னர்அதில்எவ்வாறான நடவடிக்கைகளைமுன்னெடுப்பதுஎன்பதுதொடர்பான திட்டமிடல்களை முன்னெடுக்கலாம் என இந்தியத் தூதரக அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.

இந்தக் கலந்துரையாடலில் வடக்கு மாகாண ஆளுநர்நா.வேதநாயகன், இந்தியத்துணைத்தூதுவர் சாய்முரளி, வடக்கு மாகாண பிரதம செயலர் இ.இளங்கோவன், வடக்கு மாகாண ஆளுநரின் செயலர் மு.நந்தகோபாலன், வடக்கு மாகாண உள்ளூராட்சிஅமைச்சின்செயலாளர்அ.சோதிநாதன், வடக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் – நிர்வாகம் திருமதி எழிழரசி அன்ரன்யோகநாயகம், வடக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் – நிதி எஸ்.குகதாஸ், வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் திருமதி தேவநந்தினி பாபு, யாழ். மாநகர சபை ஆணையாளர் ச.கிருஷ்ணேந்திரன் மற்றும் இந்தியத் தூதரக அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# தேசிய மக்கள் சக்தி வேட்பாளர் மீது தமிழ் அரசு கட்சியினர் தாக்குதலாம்

## ஜெகதீஸ்வரன் எம்.பி. குற்றச்சாட்டு



தேசிய மக்கள் சக்தியின் மாந்தை மேற்கு ஆண்டான்குளம் வேட்பாளர் மீது மது போதையில் தமிழரசுக் கட்சி வேட்பாளர் உட்பட இணைந்த குழுவினர் தாக்குதல் நடத்தியுள்ளனர் என தேசிய மக்கள் சக்தின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஜெகதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

செவ்வாய்க்கிருீழமை இடம்பெற்ற இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது –

இலங்கை தமிழரசுக் கட்சியின் வட்டக்கண்டல் வேட்பாளர் உட்பட்ட சிலர் மாந்தை கிழக்கு ஆண்டான்குளம் தேசிய மக்கள் சக்தி வேட்பாளர் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர். தாக்குதல் நடத்தியவர்கள் அடம்பன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். எமது கட்சி வேட்பாளர் காயமடைந்துவைத்தியசாலையில்சேர்க்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி கட்சியில் கேட்பவர் இவன் தான் எனக் கூறி தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதற்கு மன்னார் மாவட்ட சட்டத்தரணிகள் சிராஸ்வா, டெனீஸ்வரன் ஆகியோர் தாக்குதல் நடத்தியவர்கள் சார்பாக ஆஜராகியுள்ளனர். தாக்குதல் நடத்தியவர்கள் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவுக்கமைய விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் எனவும் அவர் மேலும் தொவித்தார். 100

# முன்பள்ளிக்கு குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரம் அன்பளிப்பு

(சுபேசன்)

தென்மராட்சி-மட்டுவில் ஞானதீபம் முன்பள்ளிக்கு கடந்த வெள்ளிக்கிழமை குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரம் ஒன்று வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

அழகசுந்தரம் புவனேந்திரா என்பவரின் நினைவாக சுன்னாகம் பாரம்பரிய ரோட்டரிக் கழகம் ஊடாக மேற்படி உதவித்திட்டம் வழங்கி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.





# ஐஎம்எச்ஓ - யுஎஸ் எயிட் ஆதரவுடன் மட்டக்களப்பு சிறைக் கைதிகளின் நல மேம்பாட்டு நீர் வழங்கல்

கடந்த வருடம் ஐ.எம்.எச்.ஓ. தலைவர் டாக்டர் இராஜம் தெய்வேந்திரன் அம்மணி கிழக்கிற்கு வருகை தந்தபோது கைதிகளை, சிறைச்சாலையைசென்று பார்வையிட்டு அவர்களுக்கு

தேவையான பொழுதுபோக்கு அம்சங்களாக விளையாட்டு உபகரணங்கள், தொலைக்காட்சிபெட்டி என்பவற்றை வழங்கியிருந்தார்.

அவ்வேளை சிறைச்சாலை அத்தியட்சகர் பிரபாகரனின்கோரிக்கைக்குஏற்பகைதிகளுக்குத் தேவையான நீர்வழங்கல், குளாய் நீர் குளியல் தொகுதி, மலசலகூட வசதிகள் மற்றும்

சுகாதார மேம்பாட்டுக்கான செயற்பாடுகளை செய்வதாக குறிப்பிட்டு இம்மாதம் 2 ஆம் திகதி அதனைத் திறந்து வைத்துகைதிகளின்நலநோன்புநடவடிக்கையை சிறப்பாக மேற்கொண்டார்.

இவ்வைபவத்திற்கு டாக்டர் இராஜம் தெய்வேந்திரனுடன் அவரது கணவரும் ஐஎம்எச்ஓ யுஎஸ்எயிட் அமைப்பின் நிரந்தர செயற்குழு உறுப்பினருமான டாக்டர் எஸ்.தெய்வேந்திரன் அவர்களும்

பொறியியலாளர் ஹென்றி அமல்ராஜ் ,



ஐஎம்எச்ஓ இணைப்பாளர் பிரதீப்காந்த் அவர்களும் சிறைச்சாலை அத்தியட்சகர் பிரபாகரன் அவர்களும் பங்குபற்றியிருந்தனர்.

இங்கு பேசிய டாக்டர் இராஜம் அம்மணி இலவசக்கல்வியின் மூலமாக தாம் அடைந்த வைத்திய தகுதியை இந்நாட்டு மக்களுக்கு பயன்படுத்தவேண்டியே புலம்பெயர்ந்த நாடுகளில் தாம்

பணிபுரிந்த போதும் அனைத்துலக மருத்துவ நல அமைப்பிற்கூடாக இத்தகைய கைங்கரியங்களைசெய்ய முடிகின்றது எனக்கூறினார்.



அதுமட்டுமல்லாது சிறைச்சாலை கைதிகள் அடிப்படையில் மனிதர்கள் அவர்களது உளநிலையில் மாற்றம் ஏற்படுத்தவேண்டுமெனில் அடிப்படை வசதிகள் சீர்செய்யப்படவேண்டும்

என்றவகையிலேயே இத்திட்டங்கள் 2 மில்லியன் ரூபா செலவில்

முன்னெடுக்கப்பட்டன எனக்குறிப்பிட்டார்.



# அன்னை பூபதியின் நினைவேந்தலுக்காக வெளிநாட்டில் பணம்பெற்ற மூவருக்கு எதிராக பொலிஸில் முறையீடு

மட்டக்களப்பு நாவலடியில் அமைந்துள்ள தியாக தீபம் அன்னை பூபதியின் நினைவேந்தலை வைத்து வெளிநாடுகளிலிருந்து பணத்தைப் பெற்று அதனை ஓர் அரசியலாக்கி நினைவேந்தலைச் செய்யவுள்ளதாகவும் அதனை தடைசெய்யுமாறும் கோரி 3 பேருக்கு எதிராக அன்னை பூபதியின் மகள் செவ்வாய்க்கிழமை முறைப்பாடு செய்துள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

இது பற்றி தெரியவருவதாவது -

தியாக தீபம் அன்னை பூபதியின் 37 ஆவது நினைவேந்தல் எதிர்வரும் 19 ஆம் திகதி அவரது சமாதியில் இடம்பெறவுள்ளது.

இந்த நிலையில் குறித்த நினைவேந்தலை முன்னிட்டு மனித நேய செயற்பாட்டாளர்களான 3 பேர் நோர்வே நாட்டிலிருந்து தனது தாயாரின் பெயரைப் பயன்படுத்தி பணத்தைப் பெற்று விளையாட்டு போட்டிகள் மற்றும் அன்னையின் திருவுருவப் படத்தை வாகனத்தில் வைத்து ஊர்வலமாகக் கொண்டு செல்வதற்கு திட்டமிட்டுள்ளனர்.

அமைதியாகச் செய்ய வேண்டிய இந்த நினைவேந்தலை இந்த மூவரும் அரசியலாக்கி இலாபமடையவுள்ளனர்.

இவ்வாறு செய்வதை நான் விரும்பவில்லை. ஆகவே இந்த 3 பேரின் செயற்பாட்டைத் தடுத்து நிறுத்தி இவர்களைத் தடைசெய்து அமைதியாக நினைவேந்தலைச் செய்வதற்கான சூழ்நிலையை ஏற்படுத்தித் தருமாறு குறிப்பிட்டு அவர்களுக்கு எதிராக அன்னை பூபதியின் மகள் முறைப்பாடு செய்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

# வவுனியாவில் நேருக்கு நேர் மோதிய மோ. சைக்கிள்கள்

## இரு பெண்கள் உட்பட மூவர் காயம்



வவுனியா, பூந்தோட்டம் பகுதியில் செவ்வாய்க்கிழமை மாலை இடம்பெற்ற விபத்தில் மூவர் காயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

குறித்த விபத்து தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

வவுனியா, பூந்தோட்டம் பாடசாலை திசையில் இருந்து வவுனியா நகரம் நோக்கி சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிளுடன் எதிர் திசையில் வந்த மற்றொரு மோட்டார் சைக்கிள் மோதியதில் குறித்த விபத்து இடம்பெற்றது.

விபத்தில் மோட்டார் சைக்கிள்களில் பயணித்த இரு பெண்கள் மற்றும் இளைஞர் ஒருவர் காயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.



சம்பவ இடத்திற்கு வருகை தந்த வவுனியா போக்குவரத்து பொலிஸார் விபத்து தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். 100

# நாட்டினுடைய பொருளாதார வளர்ச்சி 100இற்கு 5.4 சதவிகிதமாக அதிகரிப்பு

## வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவிப்பு

(சுபேசன்)



நாட்டினுடைய பொருளாதார வளர்ச்சி நூற்றுக்கு 5.4 சதவிகிதமாக அதிகரித்திருப்பதாக வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார். கடந்த சனிக்கிழமை இரவு சாவகச்சேரியில் இடம்பெற்ற உள்ளூராட்சித் தேர்தல் வேட்பாளர் அறிமுக நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்படி தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்; –

5 மாத காலத்திற்குள் நாட்டை மாற்றியமைத்துள்ளோம்.

இதுவரை நாட்டில் காணப்பட்ட இலஞ்சம், ஊழல் மற்றும் மோசடிகளை ஒழித்து வருகிறோம்.

இன்று மிகவும் தூய்மையான ஒரு நாடாக எமது நாடு மாறியுள்ளது.

நாடு பொருளாதாரத்தில் வங்குரோத்து நிலையில் இருந்த போதே நாட்டினைப் பொறுப்பேற்றோம். அப்போது கடன் மற்றும் சம்பளங்களை வழங்க முடியாத நிலை இருந்தது. அப்படிப்பட்ட இக்கட்டு நிலைமையை ஒரு சிறிய காலத்திற்குள் மாற்றியமைத்தோம்.

பொருளாதாரத்தில் மிக வேகமாக முன்னேறிவருகிறோம்.

நூற்றுக்கு 5.4 சதவிகித அடிப்படையில் பொருளாதார முன்னேற்றம் காணப்படுகின்றது.

நாம் நாட்டைப் பாரமெடுத்துளி பொருள் விலையைக் குறைத்தோம்,

மின்சாரக் கட்டணத்தைக் குறைத்தோம், விவசாய கொடுப்பனவு, மீனவர்களுக்கான எரிபொருள்களை அதிகரித்தோம்.

அதேநேரம் ஓய்வூதியம், முதியோர் கொடுப்பனவு, சிறுநீரக நோயாளர் கொடுப்பனவு, நலன்புரிக் கொடுப்பனவு ஆகியவற்றை அதிகரித்துள்ளோம்.

மேலும் வரவு செலவுத் திட்டத்தில் சகல அரச உத்தியோகத்தர்களுக்குமான கொடுப்பனவை அதிகரித்ததுடன் – பாடசாலை மாணவர்களுக்கான சப்பாத்து மற்றும் கல்வி ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளை வழங்கியுள்ளோம்.

ஊழல் மற்றும் வீண் விரயங்களை இல்லாதொழித்தமையால் தான் இவ்வாறான சலுகைகளை நாட்டு மக்களுக்கு வழங்கக்கூடியதாக இருந்தது. ஊழலை ஒழிப்பதன் ஊடாகவே நாட்டினை முன்னேற்ற முடியும்.

புலம்பெயர்ந்து வெளிநாடுகளுக்குச் சென்றவர்கள் மீளவும் நாட்டிற்கு வந்து முதலீடுகளைச் செய்கின்றனர். மக்கள் நாட்டை விட்டு ஓட வேண்டிய தேவை இல்லை. இனவாதம் மற்றும் மதவாதம் என்ற பேச்சுக்கே நாட்டில் இடமில்லை. என மேலும் அவர் தெரிவித்திருந்தார்.

# புத்தளம் இளங்கலை பட்டதாரிகளின் அமைப்பின் கிரிக்கெட் விழா நிகழ்வு

(சியாஜ்)

புத்தளம் இளங்கலை பட்டதாரிகளின் அமைப்பின் ஏற்பாட்டில் உள்ளக கிரிக்கெட் போட்டி தொடர் செவ்வாய்க்கிழமை ஆர் 4 புட்செல் உள்ளக விளையாட்டரங்கில் வெகு விமர்சையாக நடைபெற்றது.

ஆட்டங்களின் நேர்மையான நடத்தை மற்றும் துல்லியமான முடிவுகளுக்காக அமாத் மற்றும் பைசான் ஆகியோர் நடுவர்களாக பணியாற்றினர்.

இந்நிகழ்வின் அதிதிகளாக ஏசியன் புட்போல் பெட்ரேசன் பீ தர அனுமதிபெற்ற பயிற்றுவிப்பாளரும் புத்தளம் திறந்த பல்கலைக்கழகம் பிரதிப் பணிப்பாளர் திரு ஜிப்ரி, பாடசாலைகளின் விளையாட்டு பயிற்றுவிப்பாளர் என் அம்லக் மற்றும்

கற்பிட்டி, வணாத்தவில்லு பிரதேசசபைகளுக்கான விளையாட்டு அதிகாரி டி.எச்.ஏ சகீ அஹமட் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

போட்டியின் இறுதியில் றோயல் சேலஞ்சர்ஸ் அணி சம்பியன் பட்டத்தை கைப்பற்ற, யங் ஹிட்டர்ஸ் அணி இரண்டாம் இடம் பெற்றது.

சிறந்த பந்துவீச்சாளர் விருதை நிஷ்கான் மற்றும் சிறந்த துடுப்பாட்ட வீரருக்கான விருதை முஸர்ரப் ஆகியோர் வென்றனர்.

இந்த விழா, விளையாட்டு பரிமாற்றம் மட்டுமின்றி ஒற்றுமையையும் உறவுகளைப் பெரிதும் வலுப்படுத்திய நிகழ்வாக அமைந்தமை குறிப்பிடத்தக்கது.








காலைக்கதிர் Kalaikkathir

# தமிழர்கள் படுகொலைகளை விசாரிக்க விரும்பாத அரசு செம்மணி புதைகுழி தோண்டுவதில் தயக்கம்

## கஜேந்திரகுமார் காட்டம்

போர்க் காலத்தில் போர் நிறுத்தத்தை விரும்பாத அப்போதைய ஜே.வி.பி என்கின்ற தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தமிழ் மக்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட இனப்படுகொலைகளை மூழ்கடிக்கும் முயற்சியே செம்மணி சித்துப்பாத்தி மனித புதைகுழி அகழ்வை மேற்கொள்வதில் தயக்கம் காட்டுவதாக தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குற்றஞ்சாட்டுகிறார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இலங்கை இராணுவத்தால் சித்திரவதை செய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்ட சுமார் 600 இற்கு மேற்பட்ட தமிழ் மக்கள் யாழ். செம்மணியில் புதைக்கப்பட்டமை ஆதாரபூர்வமாக உறுதிப்படுத்தப்பட்டது.

செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வு இடம்பெற்ற காலப்பகுதியில் குறித்த பகுதி மறைக்கப்பட்டு இரவிரவாக கனரக வாகனங்கள் மூலம் அகழ்வு மேற்கொள்ளப்பட்ட நிலையில் அதனை மூடி மறைப்பதற்கும் ஆதாரங்களை அழிப்பதற்கும் பல்வேறு முயற்சிகள் அப்போதைய அரசாங்கங்களால் மேற்கொள்ளப்பட்டு வந்தது.

அதேபோன்று தற்போதைய ஜே.வி.பி என்கின்ற தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அண்மையில் செம்மணி சிந்துப்பாத்தி மயானத்தில் மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்ட நிலையில் அதனை அகழ்வதற்கு அனுமதி வழங்காது இழுத்தடிப்பு செய்கின்றது.

அரசாங்கத்தை பொறுத்தவரையில் மனிதப் புதைகுழி ஒன்றை அகழ்வதற்கு 20 லட்சம் ரூபா என்பது சிறிய தொகை. அதனை வழங்குவதற்கு கூட தற்போதைய அரசாங்கம் அக்கறை செலுத்தாது இழுத்தடிப்பு செய்கிறது.

இந்த மனித புதைகுழியை தமிழ் பேராசிரியர் ஒருவர் ஆய்வு செய்வதற்காக அமர்த்தப்பட்ட நிலையில் அவரைக் கூட தற்போதைய அரசாங்கம் மாற்றுவதற்கான காய் நகர்த்தல்களை மேற்கொண்டு வருவதாக அறியக் கிடைத்துள்ளது.

தற்போதைய தேசிய மக்கள் சக்தி என்கின்ற ஜே.வி.பியினர் தொடர்பில் தமிழ் மக்கள் சரியாக விளங்கிக்கொள்ள வேண்டும். இறுதி யுத்த காலத்தில் போர் நிறுத்தத்தை விரும்பாத இராணுவத்துக்கு ஆள்களை திரட்டி தமிழ் மக்களுக்கு எதிராக இனப்படுகொலைகளை மேற்கொண்டவர்கள், பெயரை மாற்றிக்கொண்டு தமிழ் மக்களுக்கான தீர்வினை தரப் போகிறோம் என மக்களை ஏமாற்றி தமது சிங்கள ஏகாதிபத்திய நிகழ்ச்சி நிரல்களை அரங்கேற்றிய வண்ணம் உள்ளனர்.

இறுதி யுத்தத்தில் தமிழ் மக்கள் இனப்படுகொலை செய்யப்பட்டதும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பிலும் சர்வதேச விசாரணைகளை மூடி மறைக்கும் செயற்பாடுகளில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஈடுபட்டு வருகிறது.

தேசிய மக்கள் சக்தியினர் தமிழ் மக்களுக்கு எதிரானவர்கள் என்பதற்கு தற்போதைய பட்டலந்த விவகாரம் மிகச் சரியான உதாரணமாகும்.

அதாவது தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் இரட்டை வேடத்தை தமிழ் மக்கள் அறிந்த விவகாரமாக பட்டலந்த விவகாரத்தை கொள்ளலாம்.

பட்டலந்த வீட்டுத் திட்ட குடியிருப்பில் சித்திரவதை செய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்ட தமது தோழர்கள் தொடர்பாக சர்வதேச தரப்புக்களை இணைத்து விசாரணைகளை மேற்கொள்வதற்கு தயார் என கூறுகிறார்கள். இதிலிருந்து என்ன புரிகிறது..? இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட போர் குற்றங்கள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான இனப்படுகொலைகளை சர்வதேச ரீதியில் விசாரிப்பதற்கு மறுத்து உள்ளூர் விசாரணை மூலம் தீர்வு என கூறுகிறார்கள்.

ஆனால், பட்டலந்தவில் படுகொலை செய்யப்பட்ட தமது ஜே.வி.பி. தோழர்களுக்கு சர்வதேச தரப்புக்களை அழைத்து விசாரணைக்கு தயார் என கூறும் தேசிய மக்கள் சக்தியினர் தமிழ் மக்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட படுகொலைகளுக்கும் போர் குற்றங்களுக்கும் ஏன் சர்வதேச விசாரணைகளை நடத்தி தீர்வு காண மறுக்கிறார்கள்.

தமது அரசியல் நோக்கத்துக்காக பட்டலந்த விவகாரத்தை கையில் எடுத்துள்ள தேசிய மக்கள் சக்தியினர், செம்மணி மனிதப் புதைகுழியை தோண்டுவதற்கு சிறிய பணத்தொகையை கூட வழங்க பின்னிற்கும் இவர்கள், புதைகுழி விவகாரத்தை சர்வதேசத்துக்கு கொண்டு செல்லத் தயாராக இருக்கிறார்களா?

ஆட்சிப் பொறுப்பை ஏற்று ஆறு மாதங்கள் கடந்து செல்கின்ற நிலையில், ஜே.வி.பி என்கின்ற தேசிய மக்கள் சக்தியை பற்றி தத்துவார்த்த ரீதியாக தமிழ் மக்கள் உணர ஆரம்பித்துவிட்டார்கள்.

ஆகவே, தமிழ் மக்களை தத்துவார்த்த ரீதியாக அழிப்பதற்கு பல்வேறு செயற்றிட்டங்களை வகுத்துக் கொடுத்த தற்போதைய தேசிய மக்கள் சக்தியை தமிழ் மக்கள் விரட்டியடிப்பதற்கான காலம் கனிந்துள்ளது எனத் தெரிவித்தார்.


உங்கள் கனவை நனவாக்க ...!

NVQ Level 3 & 4 Courses

புதிய பிரிவுகள் ஆரம்பம் 20.04.2025

கற்கும் போதே தொழில் ஆற்றக் கூடிய வாய்ப்பு



- CARE GIVER COURSE (பராமரிப்பாளர் பயிற்சி)
- NURSE ASSISTANT COURSE (தாதிய உதவியாளர் பயிற்சி)

கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன்
3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்

தகுதி:
- வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
- ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
- GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி

JDr
JDR HEALTH CARE (PVT) LTD
JDR PARAMEDICAL ACADEMY

46, Brodie Lane , Jaffna.
தொடர்பு:070 7070 722

## சபைகளை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊடாக தமது காரியங்களை நிறைவேற்றிக்கொள்ளமுடியும் என்ற நோக்கத்துடன் அவர்களின் மன்னார் வருகை மற்றும் தேர்தல் பரப்புரைகள் அமைந்துள்ளது.

கடந்த 6 மாதங்களுக்குள் மன்னாரிற்கு ஜனாதிபதியின் வருகை இடம் பெறவில்லை. எனினும் ஒரு சிறிய தேர்தலுக்காக அவர் மன்னாருக்கு வருகிறார். மீன்பிடி மற்றும் சுகாதார அமைச்சர்கள் மன்னாருக்கு வருவதாக கூறினார்கள். இதுவரை அவர்களின் வருகை இடம் பெறவில்லை. ஆனால் தற்போது அவர்கள் எல்லோரும் மன்னாரிற்கு வருகை தருவது எமது மண்ணையும், காற்றையும் வருமானமாக்குவதற்காகவே. எனவே மக்கள் விழிப்புடன் இருக்கவேண்டும் ஷ- என்றார்.

## தெற்கிலிருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் கேள்வி எழுப்பியுள்ளார்.

எதிர்வரும் உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் மட்டக்களப்பு மாநகர சபையில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சிசார்பில் போட்டியிடும் வேட்பாளர்கள் அறிமுகக் கூட்டம் நேற்று மாலை மட்டக்களப்பு கூளாவடி டிஸ்கோ விளையாட்டுக் கழக மைதானத்தில் மாநகர முன்னாள் முதல்வர் சரவணபவன் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் இலங்கைத்தமிழ் அரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான சாணக்கியன், சிறிநேசன், சிறிநாத் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் முன்னாள் பொதுச்செயலாளர் துரைராசசிங்கம் உள்ளிட்டவர்கள், கட்சியின் பிரதேசக் கிளை நிர்வாகிகள், மாநகரசபையின் 20 வட்டாரங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வேட்பாளர்கள், பட்டியல் வேட்பாளர்கள், ஆதரவாளர்கள் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

நிகழ்வில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மூத்த பற்றாளர்கள் கௌரவிக்கப்பட்டனர். தொடர்ந்து இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி சார்பில் மட்டக்களப்பு சபைக்குப் போட்டியிடும் வட்டார வேட்பாளர்கள் 20 பேரும், பட்டியல் வேட்பாளர்கள் 16 பேருமாக 36 வேட்பாளர்களும் அறிமுகம் செய்து வைக்கப்பட்டனர்.

அங்கு உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன், தற்போதைய நிலையில் எங்களுடைய கட்சிக்கு மாத்திரமே ஒவ்வொரு உள்ளூராட்சி சபைகளுக்கும் ஒவ்வொரு வேட்பாளர் அறிமுகக்கூட்டத்தினை நடத்தும் இயலுமை இருக்கின்றது. அந்தளவுக்கு எமது கட்சி மக்களின் நம்பிக்கை வென்ற கட்சியாக இருக்கின்றது.

இந்த மாநகர சபைக்கான தேர்தலைப் பொறுத்தவரையில் இந்த நாட்டின் ஜனாதிபதிக்கு நாம் பதில் கொடுக்கத் தேவையில்லை. எமது வட்டார வேட்பாளர்களே போதும். ஊழல் மோசடிகளற்ற ஆட்சியை எமது கட்சியே கடந்த காலத்தில் இங்கு வழங்கியது.

கடந்த காலங்களிலே எமது ஆட்சியில் சட்டவிரோதமான வேலைகளை செய்துதரக் கேட்டுக்கொண்டவர்கள் இன்று வேறு சின்னங்களில் கேட்கின்றார்கள். இலங்கை தமிழ் அரசுக் கட்சிக்கு அதிக வாக்குகள் கிடைக்கும், சங்கு சின்னத்திற்கு வாக்குகள் கிடைக்காது என்பதால், மட்டக்களப்பு மாநகரசபைத் தேர்தலில் சங்கு சின்னத்தை விட்டுவிட்டு வேறு வேறு சின்னங்களில் போட்டி போடுகிறார்கள். மட்டக்களப்பு மாவட்டத்திற்கு இம்முறை ஜனாதிபதி அபிவிருத்திக்கு ஒதுக்கிய நிதி வெறுமனே 51 மில்லியன் மாத்திரமே. ஏன் அவரது கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கந்தசாமி பிரபு அபகரித்து விடுவார் என்ற பயத்தினாலா குறைந்த நிதி ஒதுக்கீட்டை வழங்கியிருக்கின்றார்.

கிழக்கு மாகாணத்திற்கு இலங்கை ஆளும்தரப்பால் அபிவிருத்திக்கு நிதி ஒதுக்கவில்லை. இந்தியாவின் ஒதுக்கீட்டின் மூலமே அபிவிருத்தி செய்யப் போவதாக ஜனாதிபதியே சொல்லி இருந்தார். கடந்த நாடாளுமன்றத்திலே மட்டக்களப்பு மாவட்டம் மாத்திரம் தமிழ் அரசுக் கட்சியை வெற்றிபெறச் செய்தது. இந்த உள்ளூராட்சியில் வடக்குகிழக்கு தமிழர் தாயகம் முழுவதும் தமிழ் அரசுடன் இருக்கின்றது என்ற செய்தியை நாங்கள் இந்த ஆளும்தரப்புக்குச் சொல்லவேண்டும்.

எமது பிரதேசங்களைப் பற்றி தெரிந்தவர்களே இந்தப் பிரதேசத்தை ஆட்சி செய்யவேண்டும். தென்னிலங்கையில் இருந்து வந்து அனுரகுமார இங்கு ஆட்சி செய்ய வேண்டியதில்லை. அவருடன் இணைந்திருக்கும் புல்லுருவிகள் ஆட்சி செய்ய முடியாது - என்றார்.

## போலித்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள் தீர்மானித்துவிட்டனர்.

நாடாளுமன்ற தேர்தலில் எமது வெற்றியின் பின்னர் பல தமிழ்க் கட்சிகள் எம்மீது அச்சத்தில் உள்ளனர். அதன் விளைவே அவர்கள் எம்மை விமர்சிக்கக் காரணம். நாடாளுமன்றத் தேர்தலில் அவர்கள் தோல்வியடைந்ததன் பின் ஒன்றிணைவார்கள் என எதிர்பார்த்தேன். ஆனால் அது நடக்கவில்லை. ஆனால் அவர்கள் தேசிய மக்கள் சக்தியை தோற்கடிக்கும் சுயநோக்கிற்காக ஒன்றுபடுகின்றனர்.

தாம் வெல்வதனைக் காட்டிலும் தேசிய மக்கள் சக்தியை தோற்கடிக்க வேண்டும் என்பதில் மும்முரமாக இருக்கின்றனர்.

இவ்வாறு போலிப் பிரசாரம் செய்பவர்கள் விடுதலைப்புலிகள் காலத்தில் எங்கே மறைந்து இருந்தனர். 2001 ஆம் ஆண்டில் விடுதலைப் புலிகள் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் உருவாக்கத்திற்காக தமிழ் கட்சிகளுக்கு அழைப்பு விடுத்தனர்.

அன்றைய காலத்தில் புலிகளை எதிர்க்க எவருக்கும் தற்துணிவு இல்லை. அதனால் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பாக ஒன்றுபட்டனர். ஆனால் இன்றுவரை சுய இலாப நோக்கத்திற்காக கூட்டமைப்பினை அவர்கள் பதிவு செய்யவில்லை.

இவர்களே துரோகிகள். மக்கள் தேசிய மக்கள் சக்தியிடம் உள்ளூராட்சி சபைகளை ஒப்படைக்கும் போது துரோகிகளுடைய இருப்பு என்பது இல்லாமல் போய்விடும்.

தேசிய மக்கள் சக்தி தமிழ், சிங்கள, முஸ்லிம் கட்சி இல்லை. இது ஒரு மனித நேயத்திற்கான அமைப்பு - என்றார்.

## சீனப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயர்த்தியது.

இந்நிலையில் இன்று (16) சீன பொருட்களுக்கு இதுவரை 145 சதவீதமாக இருந்த இறக்குமதி வரியை 245 சதவீதமாக உயர்த்துவதாக அமெரிக்கா அறிவித்துள்ளது. சீனாவின் பழிவாங்கும் நடவடிக்கைக்குப் பதிலடி கொடுப்பதற்காக, இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது என வெள்ளை மாளிகை விளக்கம் அளித்துள்ளது.

## அமெரிக்கா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொருட்களை வாங்கும் நுகர்வோரின் எண்ணிக்கை குறைகிறது. நாம் அந்தப் பிரச்சினையை எதிர்கொள்ளவேண்டும். இதைத்தடுக்கமுடியாது, அது நடந்துகொண்டே இருக்கும். இதன் ஒரு விளைவு வேலை இழப்பு. பலர் இது ஒரு மில்லியன் என்று கூறுகிறார்கள். அது ஒரு இலட்சம் அல்லது அதற்குக் குறைவாக இருந்தாலும், அந்தத் தொகை பெரியதாக இருக்கும்.

அதைவிட ஏற்றுமதித் தொழிலுடன் தொடர்புபட்ட மற்றவர்கள். தங்கும் அறைகளை வழங்குபவர்கள், கடைகளை நடத்துபவர்கள் என, அனைவரின் வருமானத்திலும் புதிய வரி பாதிப்பை ஏற்படுத்தும்.

வரிகள் விதிப்பு இப்போது ஒத்திவைக்கப்பட்டிருந்தாலும், இந்த கால அவகாசம் முடிவடையும்போது அது நடைமுறைக்கு வரும். இலங்கை 25%-முதல் 30% வரை வரி செலுத்தினால்கூட அது ஒரு பெரிய பிரச்சினை. வரிகள் நீக்கப்பட்டதாக இலங்கை கருத முடியாது, அதனால் இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி மற்ற நாடுகளுடன், குறிப்பாக சீனாவுடன் பிரச்சினையைத் தீர்க்கப் பேச்சு நடத்தவேண்டும்.

இது இலங்கைக்கு திருப்பிச் செலுத்துவதற்கும் பெறப்படும் நிதிக்கும் இடையே குறிப்பிடத்தக்க இடைவெளியை ஏற்படுத்தும். எங்களுக்கு வழங்கப்படும் நிதியில் குறைப்பைக் காண்போம். இதனால், எங்கள் கடன் தொகைகள் அதிகரிக்கும். இதன் விளைவாக, இந்த காலாண்டில் நாங்கள் 300 மில்லியன் அமெரிக்க டொலர்களை செலுத்த எதிர்பார்க்கிறோம். இந்த நெருக்கடி காரணமாக ரூபாயின் மதிப்பு குறைந்துள்ளது. இந்தப் பிரச்சினைகளை நாம் எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

2028 கடன் திருப்பிச் செலுத்தும் இலக்கை நோக்கி ஆளும்தரப்பு முன்னேறவேண்டும். அந்த இலக்கை அடையமுடியுமா என்று அலசிப் பார்க்கவேண்டும். தற்போது நாம் சமாளிக்க வேண்டிய பல பிரச்சினைகள் இருப்பதால், அரசாங்கம் அமெரிக்க அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவதிலும், தேசிய அளவில் இதை எவ்வாறு தீர்ப்பது என்பதிலும் கவனம் செலுத்தவேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

ஆளும்தரப்பு இதை ஒரு அவசரநிலையாகக் கருதி, அது எடுக்கும் நடவடிக்கைகளை நாட்டிற்குத் தெரிவிக்க வேண்டும். நிலைமை குறித்து நாம் அறிக்கைகளை வெளியிடாவிட்டால், ஒன்றன்பின் ஒன்றாகப் பிரச்சினைகள் எழும்ரு என்று ரணில் தனது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளார்.

# பல்சுவைக்கலசம் நூல் வெளியீடு

(சர்ஜுன் லாபீர்)



பிரபல எழுத்தாளரும் ஓய்வுபெற்ற விஞ்ஞானபாட ஆசிரியருமான கலாபூஷணம் ஏறாவூர் தாஹிர் எழுதிய 'பெயர் என்ன வைக்கலாம்' எனும் பல்சுவைக்கலசம் வெளியீட்டு விழா ஏறாவூர் அறபா பாடசாலை மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

ஏறாவூர் கலை இலக்கிய வட்டம் அமைப்பின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில் சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல் முஹம்மது ஹனீபா, காத்தான்குடி பிரதேச செயலாளர் நிஹாரா மௌஜூத் மற்றும் ஓட்டமாவடி பிரதேச செயலாளர் ஏதாஹீர் ஆகிய பிரதேச செயலாளர்கள் உள்ளிட்ட பலர் அதிதிகளாகக் கலந்துகொண்டனர்.



நூலாசிரியர் கலாபூஷணம் ஏறாவூர் தாஹிர் வெளியிட்ட நான்காவது நூல் இது வென்பது குறிப்பிடத் தக்கது.

கவிஞரின் வாழ்நாளில் மனதைத் தொட்ட நிகழ்வுகள் மற்றும் வடித்த கவிதைகளும் இந்த பல்சுவைக்கலசத்தில் இடம்பெற்றுள்ளன.

கவிஞர் ஏறாவூர் தாஹிர் அதிதிகளுக்கு பனுவலின் பிரதிகளை சம்பிரதாயபூர்வமாகக் கையளித்தார்.

மேலும் இந்நிகழ்வில் சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.முகம்மது ஹனிபாவால் இங்கு அதிதி உரை நிகழ்த்தியதோடு மட்டக்களப்பு மத்தி கல்வி வலயத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளரும் எழுத்தாளருமான ஏ.எம். முபாஸ்தீன் ஆய்வுரை நிகழ்த்தினார். இந்த அரங்கில் கவிஞரைக் கௌரவித்து பல பொன்னாடைகள் போர்த்தப்பட்டன.



எப்போது வருவீர்கள், கண்டால் வரச்சொல்லுங்க, ஆடிப்பிறப்புக்கு மற்றும் ஆற்றுவெள்ளம் போன்ற தலைப்புக்களில் எழுதப்பட்ட படிப்பினைத்தகவல்கள் பனுவலில் முக்கிய இடம்பிடித்திருந்தன.

## சபைகளுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேவைக்கான பொறுப்பை நான் ஏற்றுக் கொள்வேன் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

பொத்துவில், அக்கரைப்பற்று பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து தெரிவித்ததாவது:

இனம், மதம், சாதி, வர்க்கம், கட்சி வேறுபாடின்றி நாட்டு மக்களுக்கு சேவையாற்றுவதற்காகவே ஜனாதிபதி தெரிவுசெய்யப்படுகின்றார். அவ்வாறு இல்லாது ஜேவிபிக்கு மாத்திரம் சேவையாற்றுவதற்காக நியமிக்கப்படவில்லை.

ஜனாதிபதியானவர் கட்சி, சாதி, இனம், மதம் பாராமல் அனைவருக்கும் சமமான சேவையை வழங்கவேண்டும். ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்த கருத்தை வன்மையாக கண்டிக்கிறேன். இவ்வாறான கீழ்த்தரமான அரசியல் அச்சுறுத்தல்களை கண்டு சளைக்கவேண்டாம்.

சமீபத்தில், நமது நாட்டைச் சேர்ந்த இளைஞர் ஒருவர், பலஸ்தீன மக்கள் குறித்து ஸ்டிக்கர் ஒட்டி தனது கருத்தை வெளிப்படுத்தியிருந்தார். அவ்விளைஞர் பலஸ்தீன மக்கள் சார்பாக தனது கருத்துக்களை முன்வைத்தபோது ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க பயங்கரவாத தடைச் சட்டத்தினைப் பயன்படுத்தி அவரைக் கைதுசெய்தார்.

ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசகூட பலஸ்தீன மக்களுக்கு ஆதரவாக இருந்தார். பலஸ்தீன மக்களுக்கு எதிராக இஸ்ரேலிய அரச பயங்கரவாதம் முன்னெடுக்கப்பட்ட சமயங்களில், பெரும் படுகொலைகள் இடம்பெற்ற சந்தர்ப்பங்களில், அப்போது எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த அநுர குமார திஸாநாயக்க குரல் எழுப்பினார்.

இன்று பலஸ்தீன மக்கள் சார்பாக நமது நாட்டைச் சேர்ந்த இளைஞன் ஒருவர் குரல் எழுப்பியதற்காக அதே ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, அவரைத் தடுப்புக்காவலில் வைக்க உத்தரவிடுகிறார். அறந்தளவுக்குக் கீழ்த்தரமாக நடந்துகொள்கிறார்.

ஐக்கிய மக்கள் சக்தியிடம் இரட்டைக் கொள்கைகளும் இரட்டை நாடகங்களும் இல்லை. ஐக்கிய மக்கள் சக்தி பலஸ்தீன மக்களுக்காக நின்றது. இஸ்ரேலிய அரசும் பலஸ்தீன அரசும் ஒற்றுமையாக இருக்கவேண்டும் .

ஜே.வி.பி. ஆளும்தரப்பிற்குப் பொய் சொல்லவும் ஏமாற்றவும் மட்டுமே தெரியும். அன்று தேர்தல் மேடையில் சொன்னதை இன்று செய்ய முடியாது புலம்பிக்கொண்டிருக்கின்றனர். இன்று மக்களுக்கு வறுமையும், அசௌகரியமும் அதிகரித்துள்ளன.

இவ்வாறான நிலையில் வறுமையை ஒழிக்கும் வேலைத்திட்டமொன்றை முன்னெடுக்கவேண்டும். இதற்கான வலுவான முறையான வேலைத்திட்டமொன்று அவசியம் முன்னெடுக்கவேண்டும் - என்றார்.

# கிண்ணியா பூங்கா தக்கியா பரிசில் வழங்கும் நிகழ்வு

(ஹலால்தீன்)

கிண்ணியா பூங்கா தக்கியாவினால் நடத்தப்பட்ட மாணவர்களுக்கிடையிலான தௌபா போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசு வழங்கும் நிகழ்வு பூங்கா தக்கியாவில் இடம் பெற்றது.

பூங்கா தக்கியாவின் மௌலவி ஹாபில் சுவைப் முபீத் தலைமையின் கீழ் நடைபெற்ற இந்த நிகழ்வில் பள்ளியின் அங்கத்தவர்கள் உட்பட வெற்றி பெற்ற மாணவர்களும், பெற்றார்களும் கலந்துகொண்டனர்.

வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பள்ளியின்பிரதமஇமாம்மௌலவிஅல்ஹாபி முஃபீத் மற்றும் இலக்கிய வித்தகரும் ஆசிரியருமான ஊடகவியலாளர் எச் எம் ஹலால்தீன் ஆகியோர் மாணவர்களுக்கு பரிசில்களை வழங்கி வைத்தனர்.





# திருகோணமலையில் விசேட தேவையுடைய மாணவருக்கு சித்திரை புத்தாண்டு நிகழ்வு

(ஹஸ்பர்)



விசேட தேவையுடைய மாணவர்களுக்கானசித்திரை புத்தாண்டு நிகழ்வானது செவ்வாய்க்கிழமை திருகோணமலை, மின்சார நிலையவீதியில்அமைந்துள்ள கோப் நிறுவனத்தில் நடைபெற்றது.

குறித்த நிகழ்வானது கோப் நிறுவனத்தின் பணிப்பாளர் செ.கிருபாகரன் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது கோப் நிறுவனத்தின் செயலாளர் ச.லட்சுமணன், உறுப்பினர் த.ரொகான், பட்டினமும் சூழலும் சமூக சேவைகள் அபிவிருத்தி உத்தியோகத்தர் செ.கௌரிசாந், மனிதவள அபிவிருத்தி உத்தியோகத்தர் தெ.புரபானந்தன் மற்றும் ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

# கிளிநொச்சி புளியம்பொக்கனைப் பகுதியில் 85 கிலோவுக்கும் அதிகமான கஞ்சா சிக்கியது



இராணுவத்தினருக்கு கிடைக்கப்பெற்ற ரகசிய தகவலுக்கு அமைவாக சிறப்பு அதிரடிப்படையினர் மற்றும் கிளிநொச்சி பொலீஸார்தர்மபுரம்பொலீஸார்இணைந்து புளியம்பொக்கனை கிராம அலுவலர் பிரிவு உட்பட்ட பகுதியில் வீடே ஒன்றில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனத்தில் சூட்சுமமான முறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் 85 கிலோவுக்கும் அதிகமான கஞ்சாவுடன் பளைபகுதியைச் சேர்ந்த சந்தேக நபர் ஒருவர் பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்ட சந்தேக நபர் புளியம்பொக்கனை நாகேந்திரபுரம் பகுதியில்தனியார் ஒருவரதுவீட்டை வாடகைக்கு பெற்று அங்கிருந்து கஞ்சா வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளார். இச்சம்பவம் தொடர்பாக அப்பகுதி மக்கள் பெரும் எதிர்ப்பை தெரிவித்துள்ளனர்தமதுபகுதியில்இப்படியான சம்பவங்கள் எதுவும் இடம்பெறுவதில்லை எனவும் இவர்கள் இங்கு குடியிருப்பது இதுவரையில் தமக்கு தெரியாத எனவும் இது தொடர்பாக கிராம சேவையாளருக்கும் எந்தவித பதிவுகளோ அல்லது விவரமும் கிடைக்கப்பெறவில்லை எனவும் கிராம சேவையாளரும் தெரிவித்துள்ளார். இராணுவத்தினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைவாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது இச்சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட சந்தேக நபர் தடையப் பொருட்கள் அனைத்தும் கிளிநொச்சி நீதிமன்றம் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி பொலீஸார் தெரிவித்துள்ளனர். 316

# கிளி. மாவட்ட வாக்காளர் அட்டைகள் நேற்று அஞ்சல் திணைக்களத்திடம்



கிளிநொச்சி மாவட்டத்தின் மூன்று பிரதேச சபைகளுக்குமான வாக்காளர் அட்டைகள் அஞ்சல் திணைக்களத்திடம் நேற்று கையளிக்கப்பட்டது.

மாவட்ட தேர்தல் திணைக்களத்தில் வைத்து மாவட்ட உதவித்தேர்தல் ஆணையாளர் வே.சிவராசா மாவட்ட பிரதான அஞ்சல் அலுவலக உத்தியோகத்தரிடம் கையளித்தார்.

2025 உள்ளூராட்சி சபை தேர்தலில் கிளிநொச்சி மாவட்டத்தில் 102387 பேர் வாக்காளிக்க தகுதிபெற்றுள்ளனர். 113








# பாரம்பரிய விளையாட்டுக்களை அடுத்த தலைமுறைக்கு கடத்தும் சித்திரைப் புத்தாண்டுக் கொண்டாட்டம் நேற்று

போர்த் தேங்காய், கிட்டிப்புள்ளு போன்ற விளையாட்டுக்கள் இன்றைய சிறுவர்களுக்குத் தெரியுமோ தெரியவில்லை. அப்படி மறந்துபோகின்ற எங்கள் பாரம்பரிய விளையாட்டுக்களை நினைவூட்டி அடுத்த தலைமுறைக்கு கடத்தும் வகையில் இந்தப் புத்தாண்டுக் கொண்டாட்டத்தை ஒழுங்கு செய்தமைக்காக பாராட்டுகின்றேன் என வடக்கு மாகாண ஆளுநர் வேதநாயகன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின், பண்பாட்டலுவல்கள் அலகின் ஏற்பாட்டில் விளையாட்டுத் திணைக்களம், சுற்றுலாப் பணியகம் மற்றும் வலி. தெற்கு பிரதேச சபை இணைந்து நடத்திய வடக்கு மாகாண சித்திரைப் புத்தாண்டுக் கொண்டாட்டம் - 2025 நிகழ்வு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மைதானத்தில் நேற்று இடம்பெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட ஆளுநர் தெரிவித்ததாவது:

காலத்துடன் இணைந்து பல மாற்றங்களை நாம் எதிர்கொண்டு வருகின்றோம். பல விளையாட்டு நிகழ்வுகள் அருகிச் செல்கின்றன. பல விளையாட்டுகளை மறந்தே போய்விட்டோம். நடைபெறுகின்ற விளையாட்டு நிகழ்வுகளில்கூட இளையோர் பங்கேற்பும் மிகக் குறைந்துள்ளது.

பாடசாலை மாணவர்கள், பாடசாலை அதன் பின்னர் தனியார் கல்வி நிறுவனம் என்று தமது நாளைச் செலவிடுகின்றனர். இல்லையேல் வீட்டில் இருந்து அலைபேசியைப் பயன்படுத்துகின்றனர். இப்படியிருந்தால்அவர்களால்எப்படி விளையாட்டில் ஈடுபட முடியும்?

உண்மையில் மிகச் சிறப்பான நிகழ்வை வடக்கு மாகாண கல்வி அமைச்சும், பண்பாட்டலுவல்கள் திணைக்களமும் ஏற்பாடு செய்திருக்கின்றன. தமிழ் - சிங்கள மாணவர்கள், கலைஞர்களை ஒருங்கிணைத்து செயற்படுத்தியிருக்கின்றார்கள். மறந்துபோகின்ற எங்கள் பாராம்பரியங்களை நினைவூட்டும் வகையில் இந்தக் கொண்டாட்டத்தை ஒழுங்குபடுத்தியிருப்பது மகிழ்வைத்தருகின்றது.

எப்போதும் புத்தாண்டு பிறக்கும்போது நாம் சிறப்பாக அந்த ஆண்டு அமையவேண்டும் என்பதற்காக ஆலயங்களில் வழிபாடு செய்வோம். பிறந்திருக்கின்ற சித்திரைப்புத்தாண்டு எமது மாகாணத்தில் அபிவிருத்திகள் நடந்தேறி மக்கள் சந்தோசமாக வாழ்வதற்கு வழிசெய்யவேண்டும். கனவுகளை நிறைவேற்றுகின்ற ஆண்டாக இது அமையவேண்டும், என்றார் ஆளுநர்.

சித்திரைப்புத்தாண்டுக் கொண்டாட்ட நிகழ்வில் பங்கேற்ற ஆளுநர் இன்னிய வாத்திய இசையுடன் அழைத்துச் செல்லப்பட்டார். அத்துடன் தமிழ்ப் பாரம்பரியத்துடனான குடில் மற்றும் சிங்கள பாராம்பரிய குடில்கள் என்பன மைதானத்தில் அமைக்கப்பட்டிருந்தன. அவற்றையும் ஆளுநர் பார்வையிட்டார். அவற்றைத் தொடர்ந்து மைதானத்தில் தமிழ் மற்றும் சிங்கள பாரம்பரிய கலாசார நடன நிகழ்வுகள் நடைபெற்றன. அவற்றை ஆளுநர் உள்ளிட்ட விருந்தினர்கள் தமிழ்ப் பாரம்பரிய குடிலின் முன்பாக அமைக்கப்பட்டிருந்த 'குந்தில்' இருந்து பார்வையிட்டனர். அதனைத் தொடர்ந்து வேடப்போட்டியையும் பார்வையிட்டு பாரம்பரிய விளையாட்டு நிகழ்வுகளையும் ஆளுநர் ஆரம்பித்து வைத்தார்.


























காலைக்கதிர் Kalaikkathir

# உள்ளாட்சி தேர்தல் 2025

## முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் ஐக்கிய மக்கள் சக்தியில் இணைவு

(ஹலால்தீன் )

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் நீண்ட காலம் செயற்பாட்டாளராகவும், உறுப்பினராகவும் இருந்த ஜர்ஷாத் ஏ.மஜித், ஏக்கூப் நவ்பர்,நவ்பர் முகமட் சியாம் ஆகியோர் ஐக்கிய மக்கள் சக்தி கட்சியில் இணைந்து கொண்டனர்.

ஐக்கிய மக்கள் சக்தியின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் முன்னிலையில் இவர்கள் இணைந்து கொண்டனர்.

சட்ட இளமாணி ஜர்சாத் ஏ மஜீட், முன்னாள் நகரசபை வேட்பாளரும் முன்னாள் கிராம அபிவிருத்தி சங்க தலைவருமான ஏக்கூப் நவ்பர், பிரபல சமூக சேவையாளரும் சமூக வலைத்தள பிரபலமுமான நவ்பர் முகமட் சியாம் ஆகியோர்களே இவ்வாறு இணைந்து கொண்டனர்.

கிண்ணியாவில் அமைந்துள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் காரியாலயத்திலேயே இணைந்து கொண்டனர் என நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்தார் என ஐக்கிய மக்கள் சக்தி கட்சியில் போட்டியிடும் கிண்ணியா நகர சபை வேட்பாளர் எம்.எம்.மஹ்தி தெரிவித்தார்.



## மூத்த தமிழரசுக் கட்சி உறுப்பினர் போஸ்ற் மாஸ்டருக்குக் கௌரவம்

( சகாதேவராஜா)

மட்டக்களப்பு படுவான்கரை பிரதேசத்தின் மூத்த தமிழரசுக் கட்சி உறுப்பினர் ஓய்வு நிலை தபாலதிபர் குமாரசிங்கம் வேலுப்பிள்ளை ( வயது 93) பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார்.

மண்முனை வடக்கு மாநகர சபை வேட்பாளர் அறிமுகவிழாவிலேயே அவர் இவ்விதம் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார்.

படுவான்கரை பிரதேசத்தில் அந்த நாள்களில் இலங்கை தமிழரசுக் கட்சியின் தூணாக திகழ்ந்த போஸ்ற்மாஸ்டர் வேலுப்பிள்ளை இறுதியாக முதலைக்குடா தபாலக தபாலதிபராக இருந்து ஓய்வு பெற்றவர்.



மண்முனை வடக்கு மாநகர சபை வேட்பாளர் அறிமுக விழா 16ஃ04ஃ2025 மட்டக்களப்பு கூளாவடி டிஸ்கோ விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

இதன்போது கட்சியின் மூத்த உறுப்பினர்கள் சிலர் கௌரவிக்கப்பட்டனர். அவர்களில் ஒருவராக போஸ்ற்மாஸ்டர் வேலுப்பிள்ளையும் கௌரவிக்கப்பட்டார்.



நிகழ்வில் மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான ஞா.ஸ்ரீநேசன், இரா.சாணக்கியன்,இ.ஸ்ரீநாத் மற்றும் இலங்கைத் தமிழரசு கட்சியின் வட்டார வேட்பாளர்களும் ஆதரவாளர்களும் கலந்துகொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 17.04.2025இல் வெளியிடப்பெற்றது